# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු








வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | மலர் : 01 | 10.04.2021 சனிக்கிழமை | இதழ் : 131 | பக்கங்கள் : 16




06

செஹான் சேமசிங்க மீது நடவடிக்கை அவசியம்!



07

ரஞ்சனின் எம்.பி. பதவியை பறிப்பதற்கு அரசு சூழ்ச்சி!



12

போர் குற்ற விசார ணைக்கு ஒத்துழைக்கவே மாட்டோம்!



13

மணிவண்ணன் கைதில் மகிழ்வோர் இனி தமிழ்த் தேசியம் பேச முடியாது

புலிகள் மீள் உருவாக்க குற்றச்சாட்டு

# அதிகாலை கைதான மணிவண்ணன் மாலை பிணையில் வெளியேவந்தார்

## வவுனியாவுக்கு அழைத்துச் சென்று ரி.ஐ.டி விசாரித்த பின் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்



யாழ்ப்பாணம், ஏப்.10

**இலங்கையில் தடை செய் யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்க முற்பட்ட குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.**

15

## அச்சுறுத்தி பணியவைக்கும் பொலிஸாரின் அராஜகச் செயற்பாட்டுக்கு இடமளியோம்!

### விடுதலையான பின் மணிவண்ணன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 10

பொலிஸாரின் அச்சுறுத்திப் பணியவைக்கும் கேவலமான அராஜகச் செயற்பாடுகளுக்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ள யாழ். மாநகர முதல்வர் வி.மணி வண்ணன், நகரின் தூய்மையைப் பேண நட வடிக்கை எடுத்தது அவர்களின் பார்வையில் தவறென்றால் அதே தவறைத் தொடர்ந்து செய்வோம் எனவும் கூறினார்.

சட்டம் ஒழுங்கின் பிரகாரமும் மாநகர

15

## யாழ். மேயர் கைதுக்கு புலிப் பயமே காரணம்

யாழ்ப்பாணம், ஏப். 10

தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்த பயம் ஆயு தப் போராட்டம் முடிவுக்கு வந்து 12 வருடங் களின் பின்னரும் இலங்கை பொலிஸாரிடையே நீடிக்கிறது. மணிவண்ணன் மீதான குற்றச்சாட்டு மற்றும் கைது அதன் பின்னணியிலேயே இடம் பெற்றுள்ளது என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் போக்குவரத்துக்களை இடையூறின்றி ஒழுங்கு படுத்தும் அதிகாரம் மற்றும் மாநகர சபை பணியாளர்களை நியமிக்கும் அதிகாரம்

15

## கடலில் மிதந்து வந்த போத்தல் பானத்தை குடித்த ஒருவர் பலி!

வடமராட்சி, ஏப். 10

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கடலில் மிதந்து கரை யொதுங்கிய மதுபானம் என்று நம்பப்படும் ஒருவகைப் பானத்தை அருந்திய ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

நேற்று மாலை கரை யொதுங்கிய இந்தப் போத்தலை எடுத்து 20

15

## திருநெல்வேலி சந்தை, கடைகள் திறக்க நிபந்தனையுடன் அனுமதி!

யாழ்ப்பாணம், ஏப். 10

திருநெல்வேலி சந்தைத் தொகுதி மற்றும் கடைகளை நாளை ஞாயிற்றுக்கிழமை திறப் பதற்கு நிபந்தனையுடன் அனு மதிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரி வித்தார்.

15

## மணிவண்ணன் கைது அமெரிக்கா கவலை!



கொழும்பு, ஏப்.10

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர், சட்டத் தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட் டுள்ளமை கவலையளிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் நேற்று வெள்ளிக் கிழமை வெளியிட்ட டுவிட்டர் பதிவி

15

## திருநெல்வேலியில் 22 பேர் உட்பட யாழில் 24 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ்ப்பாணத்தில் மேலும் 24 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று வெள்ளிக்கிழமை உறுதி செய்யப்பட்டது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடம் இரண்டிலும் 760 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட் டன.

15

## பிரிட்டிஷ் கோமகன் பிலிப் காலமானார்!

லண்டன், ஏப். 10

பிரிட்டனின் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவர் கோமகன் பிலிப் 99ஆவது வயதில் நேற்று காலமானார்.

அண்மை நாட்களாக உடல்நலக் குறைவால்

15

## சினோபார்ம் தடுப்பூசி பயன்பாட்டுக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனு தாக்கல்!

கொழும்பு, ஏப். 10

சினோபார்ம் தடுப்பூசியை முறை யான ஒப்புதல் இல்லாமல் பயன் படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர் நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நேற்று தாக்கல் செய்யப்பட்ட மனுவில், சீனா உற்பத்தி செய்துள்ள கொரோனா தடுப்பூசிக்கு தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணை யத்தின் அனுமதி இன்றி வழங்கப்படு வதைத் தடுக்கும் உத்தரவு கோரப்பட் டுள்ளது.

நோயாளிகளின் உரிமை களுக்கான மக்கள் இயக்கம்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாலை...

யாழ்ப்பாணம், நீதிவான் நீதிமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை அவர் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் நீதிவான் ஏ.பீற்றர் போல் மணிவண்ணனை விடுவித்து உத்தரவிட்டார்.

மணிவண்ணனுக்கு ஆதரவாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உட்பட பல சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

யாழ். மாநகரத்தைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்கும் பொருட்டு, மாநகர சபையால் காவல் படை ஒன்று தமது பணியை ஆரம்பித்தது. இதற்குப் பிரத்தியேகமாக சீருடை ஒன்றும் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த காவல் படை மற்றும் சீருடை குறித்து சர்ச்சையை ஏற்படுத்தும் வகையில் சில இணைய ஊடகங்கள், சமூக வலைத்தளங்களில் செய்திகள் பரவியிருந்தன.

விடுதலைப் புலிகளின் காவல் துறையின் சீருடையை ஒத்ததாக மாநகர காவல் படையின் சீருடை இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் மணிவண்ணன், மாநகர சபை உறுப்பினர் வரதராஜா பார்த்திபன் இருவரும் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரிடமும் நேற்று அதிகாலை 2 மணிவரை வாக்குமூலம் பெறப்பட்டது. அதன் பின்னர் வி.மணிவண்ணன் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இலங்கை பொலிஸூக்கு ஒத்ததாக யாழ்ப்பாணம் மாநகர காவல் படை அமைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

தமிழீழ காவல்துறையின் சீருடையை ஒத்த சீருடைய அணிந்திருந்தனர் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மாநகர சபையால் அமைக்கப்பட்ட காவல் படையின் கடமைகளை இடைநிறுத்துமாறு பொலிஸாரால் பணிக்கப்பட்டது.

காவல் படைக்கு வழங்கப்பட்ட சீருடைகளும் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டதுடன், கடமைக்கு அமர்த்தப்பட்ட ஐவரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டது.

மாநகர சபை ஆணையாளர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த காவல் படைக்கான சீருடை உள்ளிட்ட வற்றை ஒழுங்கு செய்தமை தொடர்பில் மாநகர சபை உறுப்பினர் வரதராஜா பார்த்தீபனிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

இதன்பின்னர், விடுதலைப் புலிகளை மீள உருவாக்கம் செய்ய முயற்சிப்பதாகக் கூறி மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், வவுனியாவிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் விசாரணை அலுவலகத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டிருந்தார்.

மணிவண்ணனை பயங்கரவாதச் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி கைது செய்ததற்கு பல்வேறு தரப்பிலிருந்தும் கடும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டன.

அத்துடன், அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறும் வலியுறுத்தப்பட்டதுடன் அமெரிக்கத் தூதுவர் அலைனா உள்ளிட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் இந்த கைது குறித்து கவலை வெளியிட்டிருந்தனர்.இந்தச் சூழலில் நேற்று மாலை மணிவண்ணன் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (அ-எ)

## அச்சுறுத்தி...

சபைக்கும் அதன் முதல்வருக்கும் இருக்கும் அதிகாரத்தின் பிரகாரமே நான் தூய்மைச் செயற்பாடுகளை முன்னெடுக்கக் காவல் பணியாளர்களை நியமித்தேன். இந்நிலையில் மாநகர சபையின் சுயாதீனத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கின்ற கேவலமாக செயற்பாடே எனது கைது எனவும் மணிவண்ணன் தெரிவித்தார்.

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்ட யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதன் பின்னர் தனது சார்பாக சட்டத்தரணிகள் சகிதம் நீதிமன்றம் முன்பாக செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

என்னை யாழ்.பொலிஸ் நிலையம் அழைத்த பொலிஸார் நீண்ட நேரம் விசாரணை செய்தனர். பின்னர் இன்று (நேற்று) அதிகாலை 2 மணி அளவில் உங்களைக் கைது செய்து பயங்கரவாத தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கிறோம் எனத் தெரிவித்தனர். பின்னர் என்னை வவுனியா கொண்டு சென்று தடுத்து வைத்து வாக்கு மூலம் பெற்றனர்.

மாநகர சபை பணியாளர் நியமனம் மற்றும் அவர்களின் சீருடை விடயத்தில் புலிகளை மீள் உருவாக்கம் செய்வதாக என் மீது குற்றச்சாட்டப்பட்டது.

மாநகர சபையின் சட்டவரம்பின் கீழ் செயற்பட்டது பயங்கரவாதமா?

வாக்குமூலத்தின் பின் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் என் மீது வழக்குப் பதிவு செய்யாமல் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர்.

மாநகர சபையின் சுயாதீன செயற்பாடுகளில் செயற்படுகின்ற எந்த அதிகாரமும் பொலிஸாருக்கு இல்லை.

பொலிஸாரின் இவ்வாறான அராஜக செயற்பாட்டுக்கு எதிராக தொடர்ந்து சட்ட ரீதியாகப் போராட நான் தயார். பொலிஸ் அராஜகத்தை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை.

எனக்காக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட அனைத்து சட்டத்தரணிகளுக்கும் நன்றி.

வவுனியா வந்த சட்டத்தரணிகள், எனது விடுதலைக்காக குரல் எழுப்பிய எனது ஆதரவாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்-என்றார். (அ)

## சினோபார்ம்...

என்ற அமைப்பே இந்தக் மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, இராஜாங்க அமைச்சர் சன்ன ஜெயசுமண, சுகாதார நிபுணர் மருத்துவர் பாலித அபயகோன், சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா ஆகியோர் பதில் கூற வேண்டியவர்களாக பெயரிடப்பட்டுள்ளது.

சினோபார்ம் தடுப்பூசியை அதன் செயல்திறன், பாதுகாப்பான மற்றும் நல்ல தரம் குறித்த முறையான ஒப்புதல்கள் பெறும் வரை அதன் பாவனையை உடன் நிறுத்த வேண்டும் என்று பதிலளிக்க வேண்டியவர்களாக பெயர் குறிப்பிட்டுள்ளோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சினோபார்ம் தடுப்பூசிக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி கிடைக்கும்வரை இலங்கையர்களுக்கு பயன்படுத்தப்படாது என சுகாதார அமைச்சர் நேற்று முன்தினம் உறுதியளித்தார். இந்நிலையில், சீனா பரிசாக அளித்த 6 இலட்சம் தடுப்பூசிகள் இந்த மாதத்தின் ஆரம்பத்தில் இலங்கை வந்தன. (ஐ)

## திருநெல்வேலியில்...

இதன்போது, 26 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது. இவர்களில் யாழ்ப்பாணத்தில் 24 பேரும் கிளிநொச்சி, முல்லைத்தீவில் தலா ஒருவரும் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் கடைத் தொகுதிகளைச் சேர்ந்த 22 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்கள் சுயதனிமைப் படுத்தப்பட்டிருந்த நிலையில் 14 நாள்களின் பின் நேற்று முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையிலேயே தொற்று கண்டறியப்பட்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவில் தலா ஒருவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள் என்றும் கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ)

## யாழ். மேயர்...

முதல்வருக்கு இருக்கிறது. அந்தச் சட்டப்படிதான் முதல்வர் மணிவண்ணன் தனது கடமையைச் செய்தார். இதில் சட்ட மீறல் எதுவும் இல்லை எனவும் சுமந்திரன் கூறினார்.

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட முதல்வர் மணிவண்ணன் நேற்று இரவு யாழ். நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்ட நிலையில் சுமந்திரன் தலைமையில் 25 வரையான சட்டத்தரணிகள் மன்றில் மணிவண்ணன் சார்பில் ஆஜராகினர்.

இந்த வழக்கில் இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிவான், மணிவண்ணனை 2 இலட்ச ரூபா சரீரப் பிணையில் விடுவித்தார். இதனையடுத்து செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீதிமன்றில் நேற்று மணிவண்ணனை முற்படுத்திய பொலிஸார் புலிகளின் காவல் துறையை ஒத்த சீருடையை பணியாளர்களுக்கு வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு விண்ணப்பம் செய்தனர்.

எனினும் பொலிஸாரின் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எனது தலைமையில் முன்னிலையான 25 வரையான சட்டத்தரணிகள் வாதிட்டோம்.

மநாகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் போக்குவரத்துகளை சீர் செய்யும் பூரண அதிகாரம் மாநகர சபைக்கு உண்டு. அதேபோன்று மாநகர சபை ஊழியர்களை நியமிக்கை அதிகாரம் முதல்வருக்கு உண்டு. மாநகர சபை தீர்மானம் அடிப்படையில் தனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி முதல்வர் மணிவண்ணன் காவல் பணியாளர்களை நியமித்தார் என நாம் வாதிட்டோம்.

புலிகள் அமைப் புடன் இந்த விடயத்தை தொடர்புபடுத்தி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளமையானது புலிகள் குறித்த பொலிஸாரின் பயத்தையே வெளிப்படுத்துகிறது.

ஆண்கள் பொதுவாக இள நீல நிறத்தில் ஆடை அணிகின்றனர். அவ்வாறாயின் அவர்கள் அனைவரும் புலிகளா?

கொழும்பில் வாகன தரிப்பிடத்தில் காவலர்கள் இதே சீருடை அணிந்தே கட்டணம் வசூலிக்கின்றனர் எனவும் மன்றில் எடுத்துரைத்தோம். இதன்போது மாநகர சபை பணியாளர்களின் சீருடையில் புலிகளின் இலட்சினை இருந்ததா? என நீதிவான் கேள்வி எழுப்பினார்.அத்துடன் மாநகர சபை இலட்சினையை தவறாக இனங்கான முடியாது. கொழும்பு மாநகர சபையால் இதே போன்றதொரு ஆடையுடன் பணியாளர்களை பணிக்கமர்த்த முடியும் என்றால் அதனையே யாழ். மாநாகர சபையால் ஏன் செய்ய முடியாது.?

கொழும்பில் அனுமதிப்போம், யாழ்ப்பாணத்தில் அனுமதிக்கமாட்டோம் என்றால் இந்த நாட்டில் மாவட்டத்துக்கு மாவட்டம் வெவ்வேறு சட்டங்கள் இருக்கின்றனவா?-என்றார்.

## பிரிட்டிஷ்...

பாதிக்கப்பட்டிருந்த அவர் மருத்துவக் கண்காணிப்பில் இருந்து வந்தார். இந்நிலையில், அவர் நேற்று காலமானார். வின்ஸ்டர்கேஸ் அரச மாளிகையில் கோமகன் பிலிப்பின் உயிர் பிரிந்தது என்று பக்கிங்ஹாம் அரண்மனை தகவல்கள் தெரிவித்தன.

பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத்துடன் 1947ஆம் ஆண்டு திருமண பந்தத்தில் இணைந்தார். இருவரும் 73 ஆண்டுகள் இல்லற வாழ்வை தொடர்ந்து வந்தனர்.

பிரிட்டிஷ் அரசின் பட்டத்துக்கு உரியவராக அடுத்த இடத்தில் இருந்த அவர், வயது மூப்பு காரணமாக 2017ஆம் ஆண்டு பொது வாழ்விலிருந்து ஓய்வு பெற்றார். அத்துடன், பிரிட்டிஷ் அரச குடும்ப வரலாற்றில் மிக அதிக காலம் இளவரசராக இருந்தவர் பிலிப் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திருநெல்வேலி...

ஞாயிற்றுக்கிழமை காலை குறித்த வியாபார நிலையங்கள் திறக்கப்படுகின்ற போதிலும் அதில் பணியாற்றுபவர்கள் ஒவ்வொருவரும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டு அவர்களுக்கு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தும் பத்திரம் வைத்திருந்தால் மட்டுமே வியாபார மையங்களைத் திறக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில், திருநெல்வேலி சந்தைத் தொகுதி மற்றும் கடைத் தொகுதிகளைச் சேர்ந்த 22 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முதலாம் கட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் அவர்களுக்கு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில் 2ஆம் கட்டமாக எடுக்கப்பட்ட மாதிரிகளிலேயே அவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## கடலில்...

பேர் வரை பருகினர் என்று தெரிய வருகின்றது. இதை அருந்தியவர்களில் ஒருவர் உடல்நிலை பாதிக்கப்படவே, அவர் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

எனினும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இவ்வாறு உயிரிழந்தவர் நாகர்கோவில் கிழக்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கந்தையா ஸ்ரீகுமார் (46) என்று தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்தை அடுத்து சிலர் தாமாகவே சென்று உடல்நலப் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டனர். (ஐ)

## மணிவண்ணன்...

லேயே இவ்வாறு கவலை வெளியிடப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் பயங்கரவாதத் தடைச் சட்டத் தின் கீழ் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அலைனா, எல்லோருடைய அடிப்படைச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அதேவேளை, பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுவதற்கு நீதித்துறை பாதுகாப்புகளுடன் கூடிய வலுவான சட்ட விதிமுறைகளைக் கொண்டிருப்பது சிறந்த வழியாகும் என்று சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

## பாராளுமன்றத்தில்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்பின்னர் சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் சிறுபான்மை மக்கள்மீது திட்டமிட்ட முறையில் இன வெறித் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதையே காணமுடிகிறது.

இலங்கையில் தமிழர்களுக்கெதிரான இனக்கலகம் 1958ஆம்ஆண்டு ஆரம்பித்து பின்னர் 1977ஆம் ஆண்டி லும் இதனையடுத்து 1983 ஜூலையிலும், இனக்கலகம் ஒரு நீண்டகால உள்நாட்டு யுத்தத்திற்கு வழிவகுத்திருந் தது. அச்சமயத்தில் முஸ்லிம் மக்களும் தமிழ் பேசுவோர் என்பதன் அடிப் படையில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களோடு இணைந்து போராட்டத்தில் குதித்திருப் பார்களேயானால் இலங்கை ஆட்சியாளர்கள் அரசியல் ரீதியாக பாரிய நெருக்கடிகளை சந்தித்திருக்க வேண்டியிருந்திருக்கும்.

எனவே, முஸ்லிம் மக்கள் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் தம்மை இணைத்துக் கொள்ளாது ஒதுங்கியிருந்தனர். இந்நிலையில், தற்சமயம் முஸ்லிம் மக்கள்மீது உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக கண்டனங்கள் தெரிவிக்கப்படுவது இனக்குரோதத்தை மேலும் வலுவடைய வைப்பதாகவே இருக்கும். தமிழ், முஸ்லிம் மக்கள் மாத்திரமல்ல. இந்திய வம்சாவளி மலையக மக்களும் அவ்வப்போது இன ரீதியான பிரச்னைகளை எதிர்நோக்கி, பாதிப்புக்குள்ளாகியிருந்தனர்.

எனவே, அலி சப்ரி அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவராக இருக்கின்றபோதிலும் தமது சமூகத்தவர் மீதான கண்டனங்களை சுட்டிக்காட்டியிருப்பது, இனவாதம் இலங்கையில் ஒரு சாபக்கேடாக தொடருவதையே எடுத்துக்காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

நேற்றைய இந்தப் பத்தியில் மணிவண்ணன் வீதியில் குப்பை போடுவதற்கும் வெற்றிலை துப்புவதற்கும் தண்டம் அறவிடுவது பற்றி குறிப்பிட்டிருந்தோம். அதைச் செய்ய முதல் குப்பைகளை வீடுகளிலிருந்து அகற்றுவதை வினைத்திறனுடன் செய்ய வேண்டும் என்பதே எமது கருத்தாக இருந்தது.

ஆனால், நகரம் ஒழுங்காக இருப்பதை உறுதிப்படுத்த அவர் காவல்படை அமைத்தது ஒன்றும் தவறான விடயமல்ல என்பதால் அதைப்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால், காவல்படை விவகாரம் இப்போது உலக அளவில் பேசுபொருளாகி இருக்கிறது.

அவர் காவல்படை அமைத்த செய்தி வந்ததும் முகநூலில் புலிகளின் காவல்துறையையும் ஒப்பிட்டு வீர வசனங்களை தெறிக்க விட்டவர்கள் நம்மவர்கள்தான். மணிவண்ணன் ஒன்றும் புதிதாக செய்யவில்லை. கொழும்பு மாநகர சபையை அடியொற்றியே இந்த காவல்படையை அமைத்தார்.

விவசாயத் திணைக்களம் பாரம்பரிய உணவுகளை நகரங்கள் தோறும் பிரபல்யப் படுத்த உணவகங்களை நிறுவியது. அதனைப் பின்பற்றி வடக்கில் வட மாகாண விவசாய திணைக்களம் உணவகங்களை அமைத்தபோது அவற்றுக்கு அம்மாச்சி உணவகம் என்று பெயர் வைத்தது மட்டும்தான் அப்போதைய வட மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் செய்தது.

ஆனால், அம்மாச்சி உணவகங்கள் திறக்கப்பட்ட போது அவரை தூக்கி கொண்டாடினார்கள் நமது முகநூல் போராளிகள். இவை எல்லாம் வவுனியாவிற்கு அப்பால் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள விரும்பாதவர்களால் வருகின்ற வினை.

நமது மணிவண்ணன் கொழும்பு மாநகர காவல் படையைப் பார்த்து நமது நகரத்திற்கு ஒரு காவல் படையை நியமித்தது போலத்தான் முன்னாள் முதல்வர் ஆர்னோல்ட்டும் கொழும்பு மேயருக்கு இருப்பது போல் மேயர் வாசஸ்தலம் கட்டவேண்டும் என்றார். அது என்னவோ அவருக்கான தனிப்பட்ட கோரிக்கை என்று அப்போது நிராகரிக்கப்பட்டது. அவ்வாறு கட்டியிருந்தால் அந்த வாசஸ்தலத்தில் இப்போது மணிவண்ணன்தான் இருப்பார்.

மணிவண்ணன் காவல்படை அமைக்கின்ற விடயத்தை அவரை மேயராக்குவதற்கு உதவிய ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கு தெரிவிக்கவில்லை என்று அவர்களும் நேற்று போர்க்கொடி தூக்கியிருந்தனர். உண்மைதான் இதுபோன்ற ஒரு நல்ல திட்டத்தை அறிமுகம் செய்கின்றபோது சபையின் அனுமதியைப் பெறுவதோடு, சமயோசிதமாக வேறு ஒரு நிறத்தில் அதனை ஆரம்பித்துவிட்டு பின்னர் கொழும்பு மாநகர சபையைப்போல நாங்கள் நிறத்தை மாற்றுகின்றோம் என்று மாற்றி இருக்கலாம்.

காவல்படை அமைக்கின்ற விடயம் ஈ.பி.டி.பியினருக்கு தெரியாது என்றால், குப்பைக்கும், வெற்றிலைத் துப்பலுக்கும் தண்டப்பணம் அறவிடுகின்ற முடிவும் சபைகூடி எடுக்கப்பட்ட முடிவா என்பது தெரியவில்லை. ஆனால், இந்த விடயத்தை புலிகளின் காவல்துறையுடன் ஒப்பிட்டவர்கள் நமது முகநூல் போராளிகள் என்பதை முன்னரே குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால், இந்த விடயத்தை பாராளுமன்றிற்கு முதலில் எடுத்துச் சென்றவர் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்தான். ஆனால், தாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதை கூட்டமைப்பும் நிரூபித்தது. இப்போது மணிவண்ணன் கைதுக்கு எதிராக பல்வேறு தரப்பினரும் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால், புலிகளின் காவல்துறையை ஒத்த சீருடை பற்றி பாராளுமன்றத்தில் குற்றம்சாட்டுகிறார் ஒரு கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர். ஆனால், அதற்காக மணிவண்ணனைக் கைதுசெய்யும்போது அதனைக் கண்டித்து அறிக்கை விடுக்கிறார் இன்னொரு கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்.

இதைத்தான் பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவது என்பார்களோ தெரியவில்லை. அவர் கைது செய்யப்பட்டிருப்பது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ். எனவே, அவர் விடுவிக்கப்பட நீண்டகாலம் ஆகலாம் என்ற எதிர்பார்ப்பில் அடுத்த முதல்வரை அல்லது பதில் முதல்வர் தொடர்பாகவும் முகநூலில் சிலர் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

ஆனால், எதிர்பார்க்கப்பட்டதுபோல் அவர் நேற்று இரவு விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். இதுகும் சிலருக்கு எரிச்சலூட்டலாம்!

**- ஊர்க்குருவி.**

# கோட்டாபய ராஜபக்ஷதான் எமது அடுத்த ஜனாதிபதி வேட்பாளர்

## பொது ஜன முன்னணி பகிரங்கமாக அறிவிப்பு



**கொழும்பு, ஏப் 10**

**"இன்னும் மூன்றரை வருடங்களில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலை வைத்து இப்போது எதிர்வுகூறல்களை வெளியிடுவது பொருத்தமாக அமையாது. இருந்தாலும் நிச்சயமாக எமது வேட்பாளர் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதான். இப்போதே அதனை அறிவிப்பதற்கான அவசியமும் அவருக்கு இல்லை" என பொது ஜன பெரமுன அறிவித்திருக்கின்றது.**

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் ஊடகவியலாளர் மாநாடு பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் உள்ள தலைமையகத்தில் நேற்று நடைபெற்றபோது ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

"இன்னும் மூன்றரை வருடங்களில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலை வைத்து இப்போது எதிர்வுகூறல்களை வெளியிடுவது பொருத்தமாக அமையாது. நிச்சயமாக எமது வேட்பாளர் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதான். இப்போதே அதனை அறிவிப்பதற்கான அவசியமும் அவருக்கு இல்லை. வேறு வேட்பாளர் குறித்து இப்போது அறிவிக்க அவசியமில்லை. பெரும்பாலான உறுப்பினர்களின் கருத்திற்கமையவே ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையாகினார்.

பஸில் ராஜபக்ஷ தனது அரசியல் செயற்பாடுகளை தொடரமுடியும். அவசியமான நேரத்தில் அவர் பாராளுமன்றத்திற்கு வரலாம். இப்போதே எதிர்வுகூறலை செய்ய முடியாது. அமைச்சர் விமல் வீரவன்ஸ அண்மைய நாட்களாக தெரிவித்த ஜனாதிபதிக்கு உயர் பதவி கட்சிக்குள் வழங்கப்பட வேண்டும் என்கிற விடயத்தை அவர் கட்சி சார்பாக யோசனையாக முன்வைத்திருக்கலாம் என்பதே எமது கருத்தாகும்.

எமக்கு இப்போதுள்ள பிரச்னை, எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைப் பிரகடனத்தை அமுல்படுத்துவதேயாகும். அரசாங்கத்திற்கு என்ன நடக்கப்போகின்றது என்பதை இன்றும் மூன்றரை வருடங்களுக்குப் பின்னரே பார்க்க முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

"சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையில் விமல் அணி சந்திப்பை நடத்தியுள்ளது. அரசாங்கத்தை பொதுஜன முன்னணியா நிர்வகிக்கின்றது என்கிற சந்தேகம் எழுந்துள்ளது" என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் தாரக்க பாலசூரிய, "அரசாங்கத்தை கூட்டணியே நிர்வகிக்கின்றது. அவ்வாறு சந்திப்புக்களை நடத்துவதானது அரசாங்கத்திற்குள் இருக்கும் முரண்பாடுகளை சுட்டிக்காட்டாது.

மாகாண சபை தேர்தல் முறையை மாற்றியமைப்பதால் அது சில கட்சிகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கலாம். அது குறித்து அவர்கள் சந்தித்திருக்கலாம். சகோதர கட்சிகள் கலந்துரையாடி ஒரே நிலைப்பாட்டை அறிவிக்கும்போது சட்டங்களை திருத்துவதற்கும் அது சாதகமாகவே அமையும்" எனத் தெரிவித்தார்.

# புதிய அரசமைப்பில் சைவத்துக்கு முன்னுரிமை வலியுறுத்தி இன்று உண்ணாவிரத போராட்டம்!

## மறவன்புலவு சச்சிதானந்தம் அழைப்பு

*யாழ்ப்பாணம், ஏப். 10*

புதிய அரசமைப்பில் சைவ சமயத்திற்கு முன்னுரிமை, மத மாற்றம், மாடுகளை வெட்ட தடைகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்து இன்று சனிக்கிழமை 12 மாவட்டங்களில், 16 ஆலயங்களில் அடையாள உண்ணாவிரத போராட்டம் நடத்தப்படவுள்ளது.

சுவாமி விபுனலானந்த அடிகளாரின் 129ஆவது பிறந்த நாளானா இன்றைய தினம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இந்த அடையாள உண்ணாவிரத போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் மறவன்புலவு சச்சிதானந்தன் வெளியிட்ட அறிக்கையில்,

புதிய அரசமைப்பில் சைவ சமயத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். மத மாற்ற சட்டத்தை உள்ளடக்க வேண்டும். மாடுகளை வெட்டுவதற்கான தடை உள்ளடக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து 12 மாவட்டங்களின் 16 ஆலயங்களில் இன்றைய தினம் தவமிருக்கிறோம் - உண்ணா நோன்பு நோற்கிறோம் - வழிபடுகிறோம்.

யாழ்ப்பாணத்தில் மருதனார் மடம் சுந்தரேச ஆஞ்சனேயர் கோயில், பருத்தித்துறை அல்வாய் வடக்கு இந்து மாணவர் இலவய கல்விக் கல்லூரிக் கோயில், வேலணை கிழக்கு சிவகலை நாட்டிய மன்றக் கோயில், யாழ்ப்பாணம் தென்மராட்சி மறவன்புலவு வள்ளைக்குளம் பிள்ளையார் கோயில்.

மன்னார் மடு பூமலர்ந்தான் கைவல்ய நவநீத ஞானப் பெருமன்றக் கோயில், வவுனியாவில் ஆசிக்குளம் சிதம்பரம் பழனிமுருகன் கோயில், வவுனியா வடக்கு பரந்தன் வரசித்தி விநாயகர் கோயில், செட்டிக்குளம் பெரிய தம்மனை முத்து மாரியம்மன் கோயில்.

அம்பாறையில் ஆலையடிவேம்பு கோளாவில் விக்னேஸ்வரர் கோயில், மட்டக்களப்பில், மண்முனை வடக்கு புன்னசோலை பத்திரகாளி அம்மன் கோயில், மண்முனை தெற்கு குருக்கள் மடம் ஐயனார் கோயில்.

அநுராதபுரம் பண்டுலுகமம் தேவானாம்பியதிசபுரம் முத்துமாரி அம்மன் கோயில், புத்தளம் முந்தல் உடைப்பு திரௌபதை அம்மன் கோயில், பதுளை ஹாலியெல மாவத்தகம எலுதலுவ தோட்டம் அருள்மிகு சிவசுப்பிரமணியர் கோயில், கண்டி அட்டபாகை கலத்த இராமர் கோயில். நுவரெலியாவில் ஹற்றன் எபோஸ்லி பிரிவு மாஸ்க் கற்பக புரம் கற்பக விநாயகர் கோயில், அம்பக்கமுவ ஹற்றன் வடக்கு முத்து மாரியம்மன் கோயில் ஆகியவற்றில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும். இந்தப் போராட்டங்களில் அனைவரையும் பங்கேற்குமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ஐ)

கல்வி TV CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
10.04.2021 சனிக்கிழமை
சார்வரி, பங்குனி 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# மைத்திரியை கைது செய்தல்

ஈஸ்டர் தாக்குதல் தொடர்ந்தும் அரசாங்கத்திற்கான நெருக்கடியாக மாறிவருகின்றது. கர்தினால் மல்கம் ரஞ்சித் தொடர்ந்தும் நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றார். மல்கமின் நடவடிக்கைகள் ஒருவகையில் அரசாங்கத்திற்கான அச்சுறுத்தலாகவும் மாறியிருக்கின்றது. இந்த பின்புலத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கைது செய்ய வேண்டுமென்றும் ரஞ்சித் புதிய பிரச்னையொன்றை ஏற்படுத்தியிருக்கின்றார். மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆளும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாக இருக்கின்றது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான பாராளுமன்ற விவாதத்தின்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஸ டி.சில்வா, மைத்திரியை கைது செய்தால் அரசாங்கம் நெருக்கடிகளை சந்திக்க நேரிடும் என்று தெரவித்திருக்கின்றார்.

ஏற்கனவே, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை வெளியாயிருக்கின்ற நிலையில், குற்றவாளிகளை கைது செய்யுமாறு கர்தினால் மல்கம் தொடர்ந்தும் அழுத்தங்களை பிரயோகித்துவருகின்றார். இந்த நிலையில், இந்த பிரச்னையை அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது? ஈஸ்டர் தாக்குதலுக்கான திட்டமிடலுடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் சிலரது பெயர்கள் வெளியில் விடப்பட்டிருக்கின்றது. ஆனால், அவ்வாறானவர்கள் எவருமே நாட்டில் இல்லை. இந்த நிலையில், தாக்குதல் தொடர்பில் போதியளவு அறிவுறுத்தல்கள் இருந்த போதிலும்கூட, அப்போது ஆட்சியிலிருந்தவர்கள் அதில் கவனக் குறைவாக இருந்திருக்கின்றனர். எனவே, அப்போது ஆட்சியிலிருந்தவர்களே இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டுமென்னும் வாதத்தையே மல்கம் முன்வைக்கின்றார். ஆனால், மல்கம் ஏன் இந்த விடயத்தில் மைத்திரிபாலவை குறிவைக்கின்றார்? சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர், மல்கம் ரஞ்சித் அரசியல்வாதிபோல் செயல்படுவதாக குற்றம்சாட்டுகின்றனர். இதற்கிடையில், பாராளுமன்ற விவாதத்தின்போது, முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவுப் ஹக்கீம், புதியதொரு சர்ச்சையை கிளப்பியிருக்கின்றார். படத்தில் நடித்தவர்கள் பற்றித்தான் இங்கு பேசப்பட்டிருக்கின்றது. ஆனால், திரைப்படத்தை இயக்கியவர்களோ வெளியில். இஸ்ரேலிய உளவுத்துறையும் தலையீடும் இருக்கலாம் என்பதுபோல் அவர் ஒரு கருத்தை தெரிவித்திருக்கின்றார். இவ்வாறான கருத்துக்களுக்கான ஆதாரம் என்ன? பாராளுமன்றத்தில் எதையும் பேசலாம் என்பதால், ஓடிமுடிந்த படம் தொடர்பில் ஒவ்வொருவரும் ஆளுக்கொரு கதையை கூறுகின்றனரா?

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணையை எந்த இடத்திலிருந்து ஆரம்பிப்பதென்னும் புதிய நெருக்கடியை அரசாங்கம் எதிர்கொண்டிருக்கின்றது. ஏனெனில், ஆட்சியிலிருந்தவர்கள் என்னுமடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்வதாயின் வெறுமனே மைத்திரிபாலவை மட்டும் குறிவைக்க முடியுமா? அப்போது பாதுகாப்பிற்கு பொறுப்பாக இருந்த பலரையும் இது தொடர்பான விராணைக்குள்ளாக்க நேரிடும். இதில் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் பொறுப்புண்டு. மேலும், பாதுகாப்புத் துறையை சேர்ந்த பலர் இதற்குள் இடம்பெறுவர். விடுதலைப் புலிகள் விவகாரத்தை கையாண்டது போன்று இந்த விடயத்தை இலகுவாக கையாள முடியாது. ஏனெனில், இது இலங்கை அரசையே குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவது போன்றது.

சர்வதேச பயங்கரவாத தாக்குதல்கள் பல்வேறு நாடுகளிலும் இடம்பெற்றிருக்கின்றன. இலங்கையின் உடனடி அயல்நாடான இந்தியாவிலும் இடம்பெற்றிருக்கின்றது. ஆனால், எங்கும் தாக்குதல் இடம்பெற்றபோது, அதிகாரத்திலிருந்தவர்கள் குற்றவாளிகளாக்கப்படவில்லை. ஆனால், இலங்கை விடயத்தில், முன்னாள் ஆட்சியாளர்களை கைதுசெய்ய வேண்டுமென்னும் கருத்தை, மல்கம் ரஞ்சித் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றார். அரசாங்கம் விடயங்களை சரியாக கையாளாது விட்டால், சர்வதேச நீதிமன்றத்தை நாடப்போவதாக அழுத்தங்களை பிரயோகித்துவருகின்றார். மல்கம், உலக கத்தோலிக்க மக்களின் அங்கீகாரம்பெற்ற ரோமின் பிரதிநிதி. அவ்வாறான ஒருவர் இலங்கை விடயத்தை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப் போவதாக கூறுவது, அரசாங்கத்தை பொறுத்தவரையில் ஒரு தலையிடிதான். இந்தத் தலையிடியை அரசாங்கம் எவ்வாறு போக்கிக் கொள்ளப்போகின்றது?

# பாராளுமன்றத்தில் நீதி அமைச்சரின் அல் - குர்ஆன் போதனை!

- அலசுவது **இராஜதந்திரி** -



இலங்கையில் வாழுகின்ற முஸ்லிம்களை பயங்கரவாதத்தின் பக்கம் தள்ளிவிட வேண்டாம் என்று முஸ்லிம் இனத்தவரான நீதி அமைச்சர் அலி சப்ரி கோரிக்கை விடுத்துள்ளார். இலங்கையில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பாக முஸ்லிம் மக்கள் குரோத மனப்பாங்கோடு பார்க்கப்படுவதற்கு கண்டனம் தெரிவிக்கும் விதத்திலேயே நீதி அமைச்சர் அலி சப்ரி, முஸ்லிம்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கவேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையில் பல நூற்றாண்டு கால வரலாற்றை முஸ்லிம் சமூகம் கொண்டிருப்பதாகவும் ஏனைய இனத்தவரோடு முஸ்லிம் மக்கள் அந்நியோன்யமாக வாழ்ந்து வருவதாகவும் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பந்தப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை வெளியாகியுள்ளதையடுத்தே தற்போது அத்தாக்குதல்களுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் பற்றிய தகவல்களும் வெளிவர ஆரம்பித்துள்ளன. 'எந்தப்புற்றிலிருந்து எந்தப் பாம்பு' என்ற சந்தேகத்துடன் ஒருவரையொருவர் குற்றம் சுமத்துகின்ற நிலையே தற்போது காணப்படுகின்றது.

**நன்கு திட்டமிட்ட தாக்குதல்கள்**

ஆனால், நன்கு திட்டமிட்ட முறையில் ஏககாலத்தில் இருவேறு மாகாணங்களில் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது. இந்தியா, உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் குறித்த எச்சரிக்கையை முன்கூட்டியே விடுத்திருந்தது. ஆயினும், இந்தியாவின் எச்சரிக்கை உதாசீனம் செய்யப்பட்டதாகவே காணப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் விபரங்கள் உரியவகையில் இதுவரை வெளியிடப்படாததன் காரணமாக இலங்கையின் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் அதிவண கர்தினால் மல்கம் ரஞ்சித், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை திருப்திகரமானதாக இல்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ளதோடு, உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் தொடர்பாக நீதி கிடைக்காவிடில் தாம் சர்வதேச நீதிமன்றத்தை நாடப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

**ரவூப் ஹக்கிமின் கருத்து**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உயிர்த்த ஞரயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பாக பாராளுமன்றத்தில் கருத்து வெளியிட்டபோது, உண்மையான சூத்திரதாரிகள் கண்டறியப்படவேண்டுமென்றும், முஸ்லிம் மக்களை பலிகடாக்களாக்கக் கூடாதென்றும் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை, உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் குறித்த புலன் விசாரணைகளில் பல முஸ்லிம் இராணுவ புலனாய்வுத் துறையினர்பற்றிய தகவல்களும் வெளியாகியுள்ளன.

நீதியமைச்சர் அலி சப்ரி வெளியிட்டுள்ள கருத்து முஸ்லிம் மக்களை பலிக்கடாக்களாக்க வேண்டாமென்றும் அவர்கள்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அவர்களை வலிந்து பயங்கரவாதத்தின் பக்கம் செல்லத் தூண்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் முஸ்லிம் சகோதரர்கள் கடந்த 30 வருடகால யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகளால் வடக்கிலும் - கிழக்கிலும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டிருந்தனர். அத்துடன், கிழக்கில் காத்தான்குடி பள்ளிவாசலில் முஸ்லிம்கள் தொழுகை நடத்தியபோது புலிகளால் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

அதேசமயம், ஓரிரு வருடங்களுக்கு முன்னர் தென்னிலங்கையில் முஸ்லிம் சமூகத்தினர் இனகலகங்களுக்குள்ளாகியிருந்தனர். அவர்களது சொத்துக்கள் நாசமாக்கப்பட்டிருந்தன.

**குரோத உணர்வு**

தற்போது உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக மீளவும் முஸ்லிம் மக்கள்மீது குரோத உணர்வை தூண்டுகின்ற நடவடிக்கைகள் பலமடைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. இதன்காரணமாகவே பாராளுமன்றத்தில் அங்கம் பெறுகின்ற அரச தரப்பு முஸ்லிம் பிரதிநிதிகள் உட்பட, எதிர் தரப்பில் இருக்கின்ற முஸ்லிம்களும் தமது இனத்தவர்களுக்காக குரல் கொடுப்பதை அவதானிக்க முடிகிறது.

நீதியமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் பேசியபோது, இஸ்லாமியரது புனிதநூலான அல் குரானை மேற்கோள்காட்டியிருந்தார். அப்போது கொடைவழங்குதல், வழிபாடு செய்தல் என்பவைற்றைவிட, ஏனைய இன மதத்தவர்களோடு ஒற்றுமையாக வாழ்வதே உயர்வான பண்பாகுமென்று நபிகள் நாயகம் கூறியிருப்பதாக நீதியமைச்சர் தெரிவித்துள்ளார். குரோத மனப்பான்மையினால் மேலும் குரோதமே வளருமென்பதை புத்தபகவான் கூறியிருப்பதையும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இன கலகங்களின் வரலாற்றை நோக்கும்போது, முஸ்லிம்களுக்கு எதிராகவே இலங்கையில் முதற்றடவையாக கலகம் கண்டியில் 1915ஆம் ஆண்டு வெடித்திருந்தது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 10 சனிக்கிழமை
சார்வரி வருடம் - பங்குனி - 28
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**
ஆலய வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள். அதிகாலையிலேயே விரயங்கள் ஏற்படும். தொழில் ரீதியான குழப்பங்கள் தோன்றி மறையலாம். பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**இடபம்**
நிர்வாகத் திறமை பளிச்சிடும் நாள். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். பிள்ளைகள் வழியில் நல்ல செய்தியொன்று வந்து சேரலாம்.

**மிதுனம்**
நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள். வருமானம் உயரும். உடல் நலம் சீராகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். கடன் சுமை குறைய புதிய வழி பிறக்கும்.

**கடகம்**
சிவாலய வழிபாட்டால் சிறப்புகளை காண வேண்டிய நாள். மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். வாகனங்கள் வழியில் திடீர் செலவுகள் ஏற்படலாம். பணியாளர்களின் ஒத்துழைப்பு குறையும்.

**சிம்மம்**
பொதுவாழ்வில் புகழ் கூடும்நாள். தொழிலில் ஏற்பட்ட தொய்வு அகலும். வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். குழந்தைகளின் நலன் கருதி எடுத்த முயற்சி கைகூடும்.

**கன்னி**
உடல் அசதி நீங்கும். ஆன்மிகப் பணிகள் செய்வீர்கள். உங்களுக்கான பொறுப்பை நன்கு உணர்ந்து செயல்படுவீர்கள். பிறருடன் தவறாக பேசி வம்பில் மாட்டுவதை தவிர்க்கவும்.

**துலாம்**
உத்தியோக வாய்ப்பு கைகூடும் நாள். உள்ளம் மகிழும் தகவல் வரலாம். சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும். நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவிற்கு வரும்.

**விருட்சிகம்**
உடல் அசதியும், மனச்சோர்வும் நீங்கும். சுபச்செய்தி உண்டு. பயணம் பலன் தரும். நிதானப்போக்குடன் எதையும் அணுகும் தன்மையால் பயன் பெறுவீர்கள்.

**தனுசு**
பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். பொதுநலத்தில் ஈடுபடும் பொழுது கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. ஊர்மாற்றம் வருவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

**மகரம்**
உடன்பிறந்தோருடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கும். இன்று நல்லதே நடக்கும். தன்னம்பிக்கை கூடும். பெரிய தொடர்பு கிடைக்கும். எண்ணம் நிறைவேறும்.

**கும்பம்**
மனதில் நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். நற்செய்தி வரும். இளைஞர்கள் குறிக்கோளை நோக்கி முன்னேறுவீர்கள். உற்சாகமான மனநிலை ஏற்படும். புதிய நண்பர்கள் கிடைப்பர்.

**மீனம்**
பணியாளர்களுக்குப் பயன்மிக்க அறிவுரைகள் கிடைக்கும். தடைப்பட்ட விஷயங்களில் இன்று வெற்றி காண்பீர்கள். உறவினர்கள் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள்

# பிரசார கூட்டங்களில் பரவிய கொரோனா!

## இம்மாத இறுதியில் உச்சம் தொடும்



சென்னை, ஏப். 10

'தமிழகத்தில் சட்டசபை தேர்தல் பிரசார கூட்டங்களில் பரவிய கொரோனா தொற்று இம்மாத இறுதியில் உச்சத்தை தொடும்' என சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேர்தல் பிரசார கூட்டங்களில் எந்த ஒரு கட்சியும் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றவில்லை. இதனால் அரசியல் கட்சி தலைவர்கள் வேட்பாளர்கள் ஆகியோர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களை தொடர்ந்து பொது மக்கள் பலரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவர். அதன்படி கொரோனா தொற்று இம்மாத இறுதிக்குள் உச்சத்தை தொடும் என சுகாதாரத்துறை கணித்துள்ளது.

சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் கொரோனா தொற்றை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். பொது மக்கள் தொடர்ந்து அலட்சியம் காட்டுவதால் தொற்று பரவலை தடுக்க முடியவில்லை. இதனால், ஒரே குடும்பத்தில் 10க்கும் மேற்பட்டோர் தொற்றால் பாதிக்கப்படும் சூழல் ஏற்படுகிறது.

கொரோனா தொற்று பாதிக்கப்பட்டு எவ்வித அறிகுறியும் இல்லாத பலர் வெளியே சுற்றுகின்றனர். அவர்களை அடையாளம் காணுவது சவாலான பணி. அவர்களிடமிருந்து தங்களை பாதுகாத்து கொள்ள முக கவசம் மட்டுமே ஆயுதமாக உள்ளது. முக கவசம் அணியாமல் இருக்கும் பட்சத்தில் கொரோனா வைரஸ் ஒரு உடலில் இருந்து மற்றொரு உடலுக்கு செல்லும் போது அதன் வீரியம் அதிகமாக உள்ளது.

தேர்தல் பிரசார கூட்டங்களிலும் இதே பிரச்னையை தான் மக்கள் சந்தித்துள்ளனர். எனவே தொற்று வேகம் அதிகரித்து இம்மாத இறுதியில் உச்சத்தை தொடும். அவ்வாறு அதிகரிக்கும் போது கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். தொற்றை தடுக்க அனைவரும் முக கவசம் சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும். 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் கட்டாயம் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்-இவ்வாறு கூறினர்.

## வாக்குப்பதிவு சதவீதம் குறைவு ஏன்? வேட்பாளர்களிடம் தீவிர விசாரணை

சென்னை, ஏப். 10

'தி.மு.க., வேட்பாளர்கள் போட்டியிட்ட தொகுதிகளில், வாக்கு பதிவு சதவீதம் குறைந்தது ஏன்' என, சம்பந்தப்பட்ட வேட்பாளர்களிடம், அக்கட்சி தலைவர் ஸ்டாலின் விசாரணை நடத்தினார்.

சட்டசபை தேர்தலில், தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் போட்டியிட்ட தொகுதிகளில், குறைந்த சதவீத வாக்குகளே பதிவாகி உள்ளன. அமைச்சர்கள் போட்டியிட்ட தொகுதிகளில், அதிக சதவீதத்தில் வாக்குகள் பதிவாகி உள்ளன. குறிப்பாக, சென்னையில் வாக்கு சதவீதம் குறைந்திருப்பது, தி.மு.க., தலைமைக்கு அதிர்ச்சி அளித்துள்ளது. இது தொடர்பாக, தேர்தல் ஆலோசனை வழங்கிய நிறுவன நிர்வாகிகளிடம், தேர்தல் அன்று, ஸ்டாலின் விசாரணை நடத்தினார்.

'பெரும்பான்மையான தொகுதிகளை கைப்பற்றி, தி.மு.க., ஆட்சியை பிடிக்கும்' என, அந்நிறுவனத்தினர், ஸ்டாலினிடம் தெரிவித்துள்ளனர். இருப்பினும், வாக்கு சதவீதம் குறைந்தது, தி.மு.க., தலைமைக்கு பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளன. இந்நிலையில், சென்னை அறிவாலயத்தில், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை மாவட்டங்களைச் சேர்ந்த, தி.மு.க., வேட்பாளர்கள் சிலரை அழைத்து ஸ்டாலின் பேசினார்.

அவர்களிடம், 'வாக்கு சதவீதம் குறைந்தது ஏன்' என்பதற்கான காரணங்களை கேட்டறிந்தார்.

## தமிழக தேர்தலில் ஆண்களை விட அதிகம் வாக்களித்தனர் பெண்கள்

சென்னை, ஏப். 10

தமிழகத்தில் நடந்து முடிந்துள்ள சட்டசபை தேர்தலில் ஆண்களை விட பெண் வாக்காளர்களே அதிகம் வாக்களித்துள்ளனர். 9 மாவட்டங்களில் மட்டுமே ஆண்கள் அதிகம் வாக்களித்துள்ளனர்.

தமிழக சட்டசபைத் தேர்தலில் 72.81 சதவீத வாக்குகள் பதிவானதாக தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்துள்ளார். கடந்த 7ஆம் திகதி 72.78 சதவீதம் பதிவானதாக கூறப்பட்ட நிலையில், இந்த புதிய தரவுகளை அதிகாரப்பூர்வமாக அவர் வெளியிட்டுள்ளார். மேலும், மொத்தமுள்ள 6.28 கோடி வாக்காளர்களில் 4.57 கோடி பேர் மட்டுமே வாக்களித்துள்ளதாகவும், 1.71 கோடி பேர் வாக்களிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பணம் பறிமுதலில் தமிழகம் முதலிடம்

சென்னை, ஏப்.10

தமிழகம் உட்பட, தேர்தல் நடந்த ஐந்து மாநிலங்களிலும், 2016 தேர்தலின் போது பிடிபட்டதை விட, இந்த முறை, பல மடங்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பிடிபட்டுள்ளன. 446 கோடி ரூபாய் ரொக்கம், பொருட்கள் பிடிபட்டு, தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

தமிழகம், புதுச்சேரி, கேரளா, அசாம் மாநிலங்களில், சட்டசபை தேர்தல் முடிந்துள்ளது. மேற்கு வங்கத்தில், எட்டு கட்டங்களாக வாக்கு பதிவு நடைபெறுகிறது. இதுவரை மூன்று கட்ட வாக்கு பதிவு முடிந்துள்ளது. ஐந்து கட்டம் நடைபெற வேண்டியுள்ளது.

தேர்தலின் போது, வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்குவதை தடுக்க, தேர்தல் கமிஷன் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. பறக்கும் படை, நிலை கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு, 24 மணி நேரமும் வாகன சோதனை நடத்தப்பட்டது. வருமான வரித்துறையினர், சந்தேகத்திற்குரிய இடங்களில் சோதனை நடத்தினர்.


'ஒன்லைன்' பணப்பரிவர்த்தனையும் கண்காணிக்கப்பட்டது. கடும் சோதனை காரணமாக, ஐந்து மாநிலங்களிலும் பறிமுதல் செய்யப்பட்ட, பணம் மற்றும் பரிசுப் பொருட்களின் மதிப்பு, 21 சட்டசபை தேர்தலை விட, பன் மடங்கு அதிகம்.

ஐந்து மாநிலங்களில், இம்முறை அதிகபட்சமாக, தமிழகத்தில், 236.51 கோடி ரூபாய் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது. அதேபோல, தங்கம், வெள்ளி, வைரம் போன்றவையும், தமிழகத்தில் அதிகம் பிடிபட்டன. போதை பொருட்கள்மற்றும் மருந்துகள், மேற்கு வங்கத்தில் அதிகம் பிடிபட்டன. அசாம் மாநிலத்தில், அதிக அளவு மது பானங்கள் பிடிபட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநியாயமாகக் கொல்லப்பட்ட தமிழரின் ஆவிகள் ஆட்சியாளர்களை நிதானமிழக்க வைக்கின்றனவா?

## மணிவண்ணன் கைதுக்கு விக்னேஸ்வரன் எம்.பி. கண்டனம்



யாழ்ப்பாணம்,ஏப்.10

**யாழ். மாநகர சபையின் ஊழியர்கள் அணிந்த ஆடை விடுதலைப் புலிகளின் காவல்துறையின் இள நீல நிற ஆடையை ஒத்ததாகக் காணப்படுகின்றது என்று கூறுவது நகைப்புக்கு இடமானது, அநியாயமாகக் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் ஆவிகள் அரசாங்கத் தலைவர்களை நிதானம் இழக்க வைத்து விட்டனவோ நான் அறியேன். கைது செய்யப்பட்ட வி.மணிவண்ணன் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன்.**

நாட்டின் மனித உரிமை மீறல்கள் எந்தளவு மோசமான ஒரு நிலைமைக்கு சென்று கொண்டிருக்கின்றன என்பதை இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது. இலங்கையில், மனித உரிமைகள் மோசமாக மீறப்படுவதற்கும், முரண்பாடுகள் ஏற்படுவதற்குமான சூழ்நிலை காணப்படுகின்றது என்று ஐ. நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் அண்மையில் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணன் கைது செய்யப்பட்டதை கண்டித்து, நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் இதனை வலியுறுத்தியுள்ளார்.

அவரது அறிக்கையில்,

யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளமை மோசமான இனவாதம், பாசிசம் ஆகியவற்றின் அடிப்படையிலானது. மணிவண்ணனை விடுதலை செய்வதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாநகர காவல் படை என்ற பெயரில் மணிவண்ணன் அமைத்த சுகாதார கண்காணிப்பு குழுவின் சீருடை விடுதலைப் புலிகளின் காவல்துறையின் ஆடையை ஒத்திருப்பதாகக் கூறியே மணிவண்ணனை அதிகாலை வேளையில் பயங்கரவாத தடுப்புப் பிரிவு கைது செய்திருக்கின்றது.

தூய்மை பேணுவதை குறிக்கும் வகையில் வெளிநாடுகள் பலவற்றில் இள நீல ஆடைகளை காவல் கடமைகளில் ஈடுபடும் குழுக்கள் பயன்படுத்துவது வழமை. கொழும்பு மாநகர சபையும் இள நீல நிற சீருடையுடன் பணியாளர்களை அமர்த்தியுள்ளது. ஆனால், யாழ் மாநகரசபை முதல்வருக்கு மட்டும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே, யாழ். மாநகர சபையின் ஊழியர்கள் அணிந்த ஆடை விடுதலைப் புலிகளின் காவல்துறையின் இள நீல நிற ஆடையை ஒத்ததாகக் காணப்படுகின்றது என்று கூறுவது நகைப்புக்கு இடமானது, அநியாயமாகக் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் ஆவிகள் அரசாங்கத் தலைவர்களை நிதானம் இழக்க வைத்து விட்டனவோ நான் அறியேன்.

ஒரு சிறிய மாநகரத்தை நிர்வகிப்பதற்கும் தமது பிரதேசங்களை தூய்மையாகவும், சுத்தமாகவும் வைத்திருப்பதற்கு கூட தமிழ் மக்கள் தமது அதிகாரங்களைப் பயன்படுத்துவதை சகித்துக்கொள்ள முடியாமல் இருக்கும் இந்த அரசாங்கத்தின் மனநிலையையும், செயல்பாடுகளையும் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். புலிகளின் சீருடைச் சீலையைப் போன்ற எந்த ஒரு சீலையையும் எவரும் பாவித்தலாகாது என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளதோ நான் அறியேன். 12 வருடங்களுக்கு முன்னர் இறந்துபோன புலிகள் மீது அரசாங்கத்திற்கு அவ்வளவு பயமா என்று கேட்க வேண்டும் போல் தோன்றுகின்றது.

இந்த நாட்டின் மனித உரிமை மீறல்கள் எந்தளவு மோசமான ஒரு நிலைமைக்கு சென்று கொண்டிருக்கின்றன என்பதை இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது. இலங்கையில், மனித உரிமைகள் மோசமாக மீறப்படுவதற்கும், முரண்பாடுகள் ஏற்படுவதற்குமான சூழ்நிலை காணப்படுகின்றது என்று ஐ. நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் அண்மையில் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தமையை இந்த சந்தர்ப்பதில் நான் நினைவுபடுத்த விரும்புவதுடன், ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த எச்சரிக்கைகளைக் கவனத்தில் கொள்ளாமல் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருந்தமையையும் தமிழ் மக்கள் அதைக் கண்டித்து இருந்தமையையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

ஆகவே, இனவாதம், பாசிசம் ஆகியவற்றின் அடிப்படையில் மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டு வரும் நிலையில், தமிழ் மக்களின் பாதுகாப்பையும் உரிமைகளையும் உறுதிசெய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பு சர்வதேச சமூகத்துக்கு இருக்கின்றது.

மணிவண்ணன் கைது தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள் சபை உட்பட இலங்கையில் உள்ள வெளிநாடுகளின் தூதுவர்கள் உடனடியாக தலையீடு செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுவதுடன், மணிவண்ணனை உடனே விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரையும் வேண்டிக்கொள்கின்றேன்-என்றுள்ளது.

# தியவன்ன ஓயா நிலைமை குறித்து மீண்டும் கேள்வி எழுப்பினார் சஜித்

## சபையில் பெரும் சலசலப்பு

கொழும்பு, ஏப். 10

தியவன்ன ஓயா மாசடைந்துள்ளமை தொடர்பாக இது வரை எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றம் கூடியது. குறித்த பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த மார்ச் 24ஆம் திகதி, புதன்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில், தியவன்ன ஓயா மாசடைந்துள்ளமை மற்றும் நீரின் நிறம் மாற்றம் தொடர்பாக சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தேன்.

குறித்த சுற்றாடல் மாசடைந்துள்ளமை தொடர்பாக தேடிப் பார்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தி இருந்தேன்.

இதன்போது அரசாங்கத்தைச் சேரந்த பிரதிநிதிகள் கூறினார்கள். நான், மக்களின் ஆதரவை பெற்றுக்கொள்வதற்காகவே இவ்வாறு கருத்து வெளியிடுவதாக குறிப்பிட்டிருந்தனர். ஆனால் இன்னும் குறித்த தியவன்ன ஓயா சுற்றாடல் மாசடைந்தவாறே காணப்படுகின்றது.

மேலும் பாராளுமன்றத்திற்கு முன்னால் இருக்கும் நீர் தடாகம் தூய்மைப்படுத்தப் படுகின்றமையினால் அதன் நீர் தியவன்ன ஓயாவுக்கு அனுப்பப்பட்டது. ஆகையினால் நீரின் நிறத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்கும் என குறிப்பிட்டார்கள்.

அதனை சுத்தப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென சபாநாயகர் கடந்த பாராளுமன்ற அமர்வில் கூறியிருந்தார். ஆனால் இன்னும் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை-என்றார்.

இவ்வாறு சஜித் கேள்வி எழுப்ப ஆரம்பித்ததும் உடனடியாக எழும்பிய அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, சஜித், சபாநாயகர் அறிவிப்பு வழங்குவதற்கு முன்னரே உரை நிகழ்த்தியமை சம்பிரதாயத்துக்கு முரணானது என குற்றம் சுமத்தினார்.

இதனால் சபையில் சிறிதளவு சலசலப்பு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து சபாநாயகர், தனது அறிவிப்புக்கு பின்னர் உரை நிகழ்த்துதமாறு சஜித் பிரேமதாஸவுக்கு அறிவித்தார்.

# வவுனியா கடையில் திருட்டு

வவுனியா, ஏப். 10

வவுனியா பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட சந்தை சுற்று வட்ட வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பகல் நேரத்தில் பணம் திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

வர்த்தக நிலையமொன்றிக்கு சென்ற நபரொருவர் வர்த்தக நிலைய உரிமையாளரிடம் பொருட்களை கோரியுள்ளார். வர்த்தக நிலைய உரிமையாளர் பொருட்களை எடுக்க சென்றவேளை வர்த்தக நிலைய காசா ளர் மேசையை திறந்து அதிலிருந்த பணத்தை களவாடி அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளார்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பான சி.சி.ரி.வி. காணொளி வெளியாகியுள்ளதுடன் மேலதிக விசாரணை களை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# முதல்வர் மணிவண்ணனுக்கு சட்டமருத்துவ பரிசோதனை

வவுனியா, ஏப். 10

யாழ்.மாநகர முதல்வர் வி. மணிவன்னன் சட்ட மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாநகரசபை யினால் உருவாக்கப்பட்ட காவல்படை தொடர்பில் மாநகரசபை முதல்வரும், சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டு. வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவின் அலுவலகத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று மதியம் சட்டவைத்திய பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு அவர் அழைத்துச்செல்லப்பட்டார்.

பரிசோதனைகளின் பின்னர் கண்டி விதீயில் அமைந்துள்ள பயங்கரவாரத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு மீண்டும் அழைத்துச்செல்லப்பட்டார்.

# மணிவண்ணனின் கைதுக்கு கஜேந்திரகுமாரும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமையைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

அவரை உடனடியாக விடுவிக்கவேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

இந்த அரசின் பாசிச ஆட்சியை நோக்கிய நகர்வுகள் உச்சத்தை எட்டியுள்ளன. இன மற்றும் அரசியல் ரீதியான பாதுகாப்பின்மை மோசமாகியுள்ளது எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஹான் சேமசிங்க மீது நடவடிக்கை அவசியம்!

## சபையில் சாணக்கியன் வலியுறுத்தல்



**கொழும்பு, ஏப்.10**

**இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனது பாராளுமன்ற சிறப்புரிமையை மீறும் வகையில் கடந்த 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் நான் ஆற்றிய உரைக்கும் என்னுடைய கருத்துக்கும் எதிராக என்னை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து விசாரிக்கவேண்டும் என நேற்று(நேற்று முன்தினம்) சபையில் வலுயுறுத்திய இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவின் கூற்றுக்கு எதிராக தக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவரின் இந்த கருத்தானது சபையில் உள்ளவர்களுக்கும் ஓர் அச்சுறுத்தலான விடயமாகும். சபையில் எனது கருத்துக்களை சுதந்திரமாகவும், பயமின்றியும் பதிவிடுவதற்கான முழு அதிகாரமும் எனக்கு உண்டு.

"அரசாங்கம் தனது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள 2021 ஆம் ஆண்டளவில் இன்னொரு தாக்குதலுக்கும் திட்டமிட்டாலும்கூட சந்தேகப்படுவதற்கில்லை.

ஏனெனில், இவர்கள்தான் கடந்த காலங்களில் சஹ்ரானுக்கு சம்பளம் வழங்கியவர்கள். அவரைப் போன்ற ஒருவர் மீண்டும் இந்த அரசாங்கத்துக்கு கிடைத்திருக்கலாம். இது தொடர்பாக நாட்டு மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும்." என அன்றைய தினம் தெரிவித்திருந்தேன்.

இந்த கருத்துக்கு எதிராக அவர் என்னைக் கைது செய்து விசாரிக்கவேண்டும் என கூறியிருப்பது எனது சிறப்புரிமையை மீறும் செயல்பாடாக காணப்படுகின்றது.

எமது கட்சியானது புதிய கட்சி இல்லை 1948ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டதாகும். எமக்கு எல்லா உரிமையும் உண்டு. இந்த ஜனநாயக நாட்டில் இவ்வாறான ஒழுக்க விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை கட்டாயம் எடுக்கப்படவேண்டும்-என்றார்.

# யாழ்.மாநகர மேயர் கைது பழிவாங்கும் நடவடிக்கை

## கனடா - பிரம்டன் மேயர் கண்டனம்

மொன்றியல், ஏப். 10

இலங்கை அரசின் பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் யாழ்.மாநகர மேயர் மணிவண்ணன் கைது செய்யப்பட்டுள்ளமை இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே கருதப்படுகிறது என கனடா - பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

இது தவறான நடவடிக்கை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் இலங்கை விடுவிக்க வேண்டும். தமிழ் இனப்படுகொலை தொடர்பில் நீதியை நிலைநாட்ட ஐ.நா. வுடன் இலங்கை ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் எனவும் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுண் கோரியுள்ளார்.

# நியூ டயமண்ட் கப்பல் உரிமையாளரிடம் 342 கோடி ரூபா நட்டம் கோரும் அரசு

கொழும்பு, ஏப். 10

இலங்கை கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான நியூ டயமண்ட் கப்பல் மூலம் ஏற்பட்ட சூழல் சேதங்களுக்கான நட்டஈட்டு தொகையான 342.3 கோடி ரூபாவை (19,022 அமெரிக்க டொலர்கள்) கப்பல் உரிமையாளரிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஆவணங்கள் சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் எரிபொருள் எடுத்துச் சென்ற நியூ டயமண்ட் கப்பல் திருகோணமலை கடற்பரப்பில் விபத்துக்கு உள்ளாகி இருந்தது.

இதன்போது ஏற்பட்ட எண்ணெய்க்கசிவு காரணமாக கடற்சூழலுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நட்ட ஈடு செலுத்துமாறு கப்பல் உரிமை நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது

# ரஞ்சனுக்கு வழங்கிய தண்டனையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

## சரத் பொன்சேகா திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 10

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வழங்கப்பட்ட தண்டனையை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது என முன்னாள் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு தொடர்பிலான குற்றங்களுக்கு தண்டனை விதிக்கும் எந்தவொரு சட்ட விதிகளும் நாட்டில் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை இவ்விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே சரத் பொன்சேகா இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:

நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான உலகளாவிய சூழ்நிலைகள் வேறுபட்டவையாவையாகும்.

இந்தியாவில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சட்டத்தரணி ஒருவருக்கு, இந்திய ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

எனினும் அவர் அபராதம் செலுத்த மறுத்துவிட்டார். அதனைத் தொடர்ந்து அவர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் இலங்கையில் அவ்வாறான விடயத்துக்கு தண்



டனை வழங்குவது தொடர்பாக எந்தவொரு சட்டமும் இல்லை.அவ்வாறிருக்க ரஞ்சன் ராமநாயக்காவுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளமையை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது-என்றார்.

# சட்டவிரோத செயல்பாடுகள் தொடர்பில் பளையில் துண்டுப்பிரசுரம் விநியோகம்

கிளிநொச்சி, ஏப். 10

பளை பிரதேசத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத செயல்பாடுகள் தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

சமத்துவக் கட்சியின் சமூக பாதுகாப்புப் பிரிவின் பச்சிலைப்பள்ளி கிளையினரால் மேற்படி விழிப்புணர்வு துண்டுப் பிரசுரம் பொது மக்களிடையே விநியோகிக்கப்பட்டு வருகிறது.

குறித்த துண்டு பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அபாயம் நம்மைச் சூழ்ந்துள்ளது. அழகான பச்சிலைப்பள்ளிக்கு ஆபத்து வந்துள்ளது. வளமான நம் பிரதேசம் வாழவே முடியாத அளவுக்கு அழிக்கப்படுகிறது.வளமான பச்சிலைப் பள்ளியின் வளமெல்லாம் கொள்ளையடிக்கப்படுகிறது.

கிளாலி தொடக்கம் இயக்கச்சி வரையில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு, முகமாலை தொடக்கம் ஆனையிறவு வரையில் அரச காணிகள் அபகரிப்பு, பச்சிலைப்பள்ளி எங்கும் கட்டற்ற வகையிலான காடழிப்பு, பளைப் பிரதேச மெங்கும் பனை தறிப்பு, கடலோரக் காடுகளும் களப்பின் வளங்களும் சிதைப்பு.

இதெல்லாம் நம்முடைய கண்ணுக்கு முன்னே நடந்து கொண்டிருக்கும் அநியாயங்கள். அத்தனையும் மக்களுக்கு எதிரான செயல்பாடுகள். ஒரு பிரதேசத்தை முற்றாகவே அழித்தொழிக்கும் காரியங்கள். யுத்த காலத்தில் கூட இந்தளவுக்குப் பச்சிலைப்பள்ளியில் அழிவு நடக்கவில்லை.

இப்பொழுது அதிகாரத்தரப்புகளும் அரசியல் தரப்புகளும் இணைந்து இந்த அழிப்பைச் செய்கின்றன. இதில் தந்திரமாகக் கொள்ளை அடிக்கிறார்கள். இதற்குப் பின்னால் தீய சக்திகளே இயங்குகின்றன.

பச்சிலைப்பள்ளியில் பொது மக்களுக்கும் பொதுத் தேவைகளுக்குமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய அரச காணிகள் யாரென்றே முகம் காட்டாதவர்களுக்கெல்லாம் இரகசியமாகப் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. ஆனால், இங்குள்ள எமது மக்களில் பலருக்குக் காணிகள் இல்லை. இதைப்பற்றி யாரிடம் முறையிடுவது? இதற்கு யார் தருவார் நீதி?

ஒரு பக்கம் எமது பிரதேசத்தில் மக்களின் காணிகளில் படையினர் நிலை கொண்டுள்ளனர். ஆனால், அரச காணிகள் யார் யாருக்கோ என வெளிமாவட்டத்தில் உள்ளவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இந்த அநியாயத்துக்கு யார் பதிலளிப்பது?

இந்தக் குறுகிய பிரதேசத்தில் மணலைத் தொடர்ந்து அகழ்ந்தால், நில அமைப்பு மாற்றத்துக்குள்ளாகி, கடல் நீர் உட்புகக் கூடிய அபாயம் ஏற்படும். அது மட்டுமல்ல, மாரி காலத்தில் பெரும் வெள்ளப் பெருக்கும் ஏற்படக் கூடிய அபாயம் உண்டு. இவை இரண்டும் எமது பிரதேசத்தையே மக்கள் வாழ முடியாத நிலைக்குள்ளாக்கி விடும். ஆகவே இதை நாம் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்காக நாம் ஒருங்கிணைவது அவசியம்.

இதையே நாம் சிந்திக்க வேண்டும். கேப்பாபிலவிலும் இரணை தீவிலும் மக்கள் தங்கள் ஊர்களை மீட்டதைப் போல, நாமும் நமது நிலங்களையும் வளங்களையும் காப்போம். எமது மரபு ரீதியான வாழிடத்தையும் வாழ்க்கையையும் மீட்டெடுப்போம். தாமதிக்க முடியாது. இன்றே செயலில்இறங்குவோம்.தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் அழிவே நிகழும் என்பதை உணர்ந்து செயற்படுவோம்- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கைதான மணிவண்ணனை சந்திப்பதற்கு வவுனியாவில் கூடினர் சட்டத்தரணிகள்!

## சட்டரீதியிலான சந்திப்புக்கு அனுமதி மறுப்பு!

வவுனியா, ஏப். 10

யாழ்ப்பாணத்தில் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டு வவுனியா கொண்டு செல்லப்பட்டதாகச் சொல்லப்பட்ட யாழ்.மாநகர முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணனை சந்திப்பதற்காக சட்டத்தரணிகள் பத்துக்கும் மேற்பட்டவர்கள் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகதில் கூடினர்.

இருந்தபோதிலும் அவர்களுக்குச் சட்டரீதியில் மணிவண்ணனை சந்திப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாகவும் இருந்தபோதிலும் மணிவண்ணனை சந்திப்பதற்கு அனுமதி வழங்குமாறு எழுத்து மூலம் கோரிக்கைவிடுத்து பத்துக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஞ்சனின் எம்.பி. பதவியை பறிப்பதற்கு அரசு சூழ்ச்சி!

## அதில் சபாநாயகருக்குப் பங்கு என்று சஜித் குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப்.10

**ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறிப்பதில் அரசாங்கம் சூழ்ச்சி செய்வதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ரஞ்சனை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றும் அரசாங்கத்தின் சூழ்ச்சியில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவும் பங்குத்தாரராக இருக்கிறா ரெனவும் தெரிவித்தார்.**

சபாநாயகர் தலைமையில் நேற்று முன்தினம் கூடிய பாராளுமன்ற அமர்வில் ஒழுங்குப் பிரச்னை எழுப்பி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொலைகாரரைப் பாராளுமன்றத்துக்கு வருவதற்கு அனுமதியளித்திருக்கும் சபாநாயகர் ஏன் ரஞ்சனை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றுவதற்கு இத்தனை அவசரப்படுகிறார். இருவருக்கும் பொதுவாக நடந்துகொள்ளவேண்டிய சபாநயாகர் ஏன் வெவ்வேறு விதமாக நடந்துகொள்கிறார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியத் தீர்ப்புக்கு எதிராக உயிர்நீதிமன்றத்துக்கு செல்ல ரஞ்சன் ராமநாயக்கவுக்கு உரிமையுள்ளது. எனவே, இந்த வழக்கு விசாரணைகள் நிறைவடையும் வரையில் ரஞ்சன் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறார் என்ற முடிவை எடுக்கவேண்டும்.

ரஞ்சனை பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றுவதற்கு அரசாங்கம் சூழ்ச்சி செய்கிறது. கம்பஹா மாவட்ட மக்களால் தெரிவு செய்யப்பட்ட ரஞ்சனின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறிப்பது, மக்கள் ஆணைக்கு எதிரான செயற்பாடு.

பாராளுமன்றத்தில் ரஞ்சன் இருக்கவேண்டுமென உயிர் நீதிமன்றம் ஒருவேளை தீர்ப்பு வழங்கினால், சபாநாயகர் என்ன செய்வார்? தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இது தொடர்பில் கடிதமொன்றின் ஊடாக தெளிவுப்படுத்த வேண்டும்.

ரஞ்சன் தொடர்பில் சபாநாயகர் எடுத்திருக்கும் தீர்மானம் அரசமைப்புக்கு முரணானதோடு, தவறான தீர்மானம். ரஞ்சன் இந்நாட்டின் பிரஜை என்றடிப்படையில், அவரது சிவில் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்- என்றார்.




# சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு கோரி மின்சார சபை ஊழியர்கள் போராட்டம்

கொழும்பு, ஏப். 10

சம்பள முரண்பாடுகள் மற்றும் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்பட வேண்டிய 25 சதவீத சம்பள உயர்வு ஆகியவற்றைத் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, அரசாங்கத்தை வலியுறுத்தி இலங்கை மின்சார சபை ஊழியர்கள் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டோர், சம்பள விவகாரம் தொடர்பாக எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, கடுமையான பொருளாதார துயரங்கள் இருந்தபோதிலும், கடந்த ஏப்ரல் 7ஆம் திகதி கூடிய இயக்குநர்கள் குழு, தொழிலாளர்கள் கோரிய சம்பள உயர்வுக்கு பரிந்துரை செய்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் பொறியியலாளர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

அத்துடன் பாராளுமன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டதும் சம்பள உயர்வு நடைமுறைக்கு வரும் எனவும் உறுதியளித்தார்.

# பாராளுமன்றத்தை பலவீனமாக்கும் வகையில் சிலரின் செயல்பாடுகள்

## அமைச்சர் பந்துல சீற்றம்

கொழும்பு, ஏப். 10

சிலரின் செயல்பாடுகள் பாராளுமன்றத்தைப் பலவீனமடைய செய்யும் வகையில் அமைகின்றது என அமைச்சர் பந்தல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த பாராளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற சில செயற்பாடுகள் ஏற்புடையதல்ல.

அதாவது பாராளுமன்ற உறுப்பினரின் சில செயல்பாடுகள், பாராளுமன்றத்தை கீழ் நோக்கிக் கொண்டு செல்லும் வகையில் அமைந்துள்ளன.

தினேஷ் குணவர்தன, லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோர் இந்த பாராளுமன்றத்தில் பல வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்துள்ளனர்.

ஆனால், இத்தகைய கால கட்டத்தில் அநாவசியமாக கேள்விகளை கேட்டு, தங்களுக்கு ஏற்றவகையில் செயல்படுவதற்கு இதுவரை காலமும் இலங்கை பாராளுமன்றத்தில் எவருக்கும் இடமளிக்கப்படவில்லை.

நாட்டிலுள்ள எந்த அமைப்புக்களும் நீதிமன்றம், சட்டத்திட்டங்கள் ஆகியவற்றினை மதித்து செயல்படாவிடின் இடையிலேயே காணாமல் போய்விடும்.

மேலும் அதிபரின் கருத்துக்கு மதிப்பளித்து கல்வி நிலையம் இயங்கவில்லை என்றால் வீழ்ச்சியை நோக்கியே செல்லும். பாராளுமன்றம் முழு நாட்டையும் பிரதிபலிக்கின்றது என்பதை கருத்தில்கொண்டு ஒவ்வொரு மக்கள் பிரதிநிதிகளும் செயற்பட வேண்டும்- என்றார்.



# மணல் மாபியா குறித்து ஜனாதிபதியிடம் நேரில் முறையிட்டார் சாணக்கியன் எம்.பி.

கொழும்பு, ஏப். 10

மணல் மாபியாக்களின் செயல்பாடுகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.

பாதுகாப்பு ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றிருந்தது.

இதன்போதே குறித்த விடயம் தொடர்பாக இரா.சாணக்கியன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டு சென்றிருந்தார்.

வவுனியா மற்றும் அம்பாறையில் முன்னெடுக்கப்பட்டுவரும் சட்டவிரோத மண் அகழ்வு குறித்தும் இரா.சாணக்கியன், ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு சென்றிருந்தார்.

அத்துடன், குறித்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தியிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் சட்டவிரோத மண் அகழ்வு குறித்து ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன் மற்றும் கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சென்றிருந்தனர்.

இதன்போது சிலர் குறித்த இருவருக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயல்பட்டிருந்த நிலையில், அது குறித்து இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின்போது தெரிவித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன் மற்றும் கோவிந்தன் கருணாகரம் ஆகியோருடன் இணைந்து இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனும் அடுத்த சில நாட்களில் குறித்த பகுதிக்கு சென்றிருந்தனர்.

இதன்போதும் குறித்த மூவரையும் அச்சுறுத்தும் வகையில் சிலர் செயற்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்மக்களை தொடர்ந்தும் பீதியில் வைத்திருக்க விரும்புகின்றது அரசு

## மணிவண்ணன் கைதுக்கு கூட்டமைப்பு கண்டனம்

கொழும்பு, ஏப். 10

"தமிழ் மக்களைத் தொடர்ந்தும் பயப்பீதியில் வைத்திருப்பதையே அரசு விரும்புகின்றது. இதன் வெளிப்பாடாகவே யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் கைதுசெய்யப்பட்டுள்ளார்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

யாழ்ப்பாணம் மாநகர மேயர் மணிவண்ணன் விசாரணையின் நிமிர்த்தம் யாழ். பொலிஸாரால் அழைக்கப்பட்டு அதிகாலை வேளையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். இந்தத் திட்டமிட்ட கைது நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

யாழ்ப்பாணம் மாநகர சபையும் ஏனைய மாநகர சபைகளைப் போன்று மாநகர சபைகளுக் குரிய அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்த முனைகின்றபோது இவ்வாறான தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. அரசு இந்தக் கேவலமான நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும். கைதுசெய்யப்பட்டுள்ள யாழ். மாநகர மேயரை உடனடியாக விடுவிக்க வேண்டும்" - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு அரசியலில் சுற்றுச்சூழல் அக்கறை



**நித்யானந்த் ஜெயராமன்**
சூழலியல் செயல்பாட்டாளர்,

சூழலியல் குறித்த உறுதிமொழிகள் தமிழக அரசியலில் அழுத்தமாக இடம் பிடித்திருக்கின்றன. பெரிய அளவிலான உள்கட்டமைப்பு, தொழிற்சாலைகள் ஆகிய வற்றுக்கான திட்டங்களைக் காட்டிலும் விவசாயிகள், மீனவர்களின் உரிமைகள் கூடுதல் மதிப்பைப் பெற்றிருக்கின்றன. அ.இ.அ.தி.மு.கவைத் தவிர, 2021 தேர்தல் களத்தில் நிற்கும் அனைத்து முக்கியக் கட்சிகளும் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்குத் தமது தேர்தல் அறிக்கைகளில் தனிப் பகுதியை ஒதுக்கியிருக்கின்றன.

தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றப்படுமா என்னும் ஐயம் நியாயமானதுதான் என்றாலும் அரசியல் சார்ந்த அக்கறைகளில் சூழலியலும் இடம்பெறுவதே தமிழக அரசியலில் வரவேற்கத்தக்க பண்பாட்டு ரீதியான மாற்றத்தைக் குறிக்கிறது. இவை வெறும் அடையாளபூர்வமானவை என்று நிராகரிப்பது அறிவுடைமை ஆகாது. சூழலியல் கோட்பாட்டின் உள்ளூர் வடிவங்களை உருவாக்குவதில் சுய மரியாதை இயக்கம் போன்ற முந்தைய பண்பாட்டு இயக்கங்கள், தமிழர்களின் மொழிசார் அடையாளத்தின் ஆழம் ஆகியவற்றின் ஆற்றலை அவமதிப்பதாக அது அமையும். தொழிற்சாலைகளுக்குப் பதிலாக வேளாண்மையை தமிழகத்தின் அடையாளமாக வரையறுக்கும் போக்கு தற்போது புதிய மதிப்பைப் பெற்றிருக்கிறது.

ஆனால், அரசியல் களத்தில் நிகழ்ந்துள்ள இந்தச் சதகமான மாற்றத்தை இரண்டு அச்சங்கள் குலைக்கக் கூடியவை. முதலாவதாக, சுயமரியாதையின் அடிப்படையில் அமைந்த சூழலியல் கோட்பாடு என்பது, தமிழ்த் தேசியவாதம் சார்ந்த தீவிரப்போக்கின் துணைப் பிரிவான, "எங்கள் ரத்தம், எங்கள் மண்" என்பதாகச் சறுக்கிவிடக் கூடாது. பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ் போன்றவர்களின் அனைவரையும் உள்ளடக்கும் மரபிலிருந்து உருவான வலுவான அரசியல் போக்குகள் இந்த அச்சத்தைத் தணிக்கின்றன.

இரண்டாவது அச்சம், பூமியைப் பாதிக்கக்கூடிய சூழலியல் நெருக்கடியின் பிரம்மாண்டத்தன்மையையும் அவசரத்தையும் அரசியல்வாதிகள் புரிந்துகொள்ளாமல் இருப்பதற்கான சாத்தியப்பாடு.

தமிழக அரசியல் என்பது பெருமக்கள் திரளின் விருப்பத்தை மையமாகக் கொண்டது. போராட்டங்களின் மூலமாகவே பெரும்பாலும் வெளிப்படும் மக்களின் விருப்பங்களை அடிப்படையாக வைத்து உருவாவது. இந்தி எதிர்ப்புப் போராட்டங்களிலிருந்து ஜல்லிக்கட்டுப் போராட்டம்வரை போராட்டங்களும் எதிர்ப்பு இயக்கங்களும்தான் தமிழ்நாட்டின் அரசியல் கலாச்சாரத்தை வடிவமைக்கின்றன. ஆகவே, சூழலியல் சார்ந்த அக்கறை தமிழ்நாடு அரசியலில் ஏற்பட்டிருப்பதற்கு முக்கியக் காரணம் விழிப்புணர்வு என்பதைக் காட்டிலும் வெகுஜனத்தன்மைதான் காரணம் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்.

போராடுவதில் சளைக்காத தமிழகம் கடந்த பத்தாண்டுகளில் வழக்கத்தைவிட அதிகமாகவே போராட்டங்களைக் கண்டது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் அரசியலில் திராவிட யுகத்தைத் தொடங்கியது என்றால், அணு உலைக்கு எதிராக 2011 முதல் 2013வரை நடைபெற்ற போராட்டம் அரசு ஆதரவு பெற்ற பெரு நிறுவனங்களிடமிருந்து நிலம், நீர், வாழ்வாதாரம் ஆகியவற்றைக் காப்பதற்கான போராட்டங்களுக்குத் தனித்த தமிழ் அடையாளத்தைக் கொடுத்தது.

கூடங்குளத்தில் அணு உலையை எதிர்த்து இடிந்தகரை என்னும் சிறிய கிராமத்தில் மீனவர்கள் அஹிம்சை வழியில் போராடினார்கள். இதன் மூலம் அந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆனால், அந்தப் போராட்டம் அணு ஆற்றல் குறித்தும் சூழலியல் சார்ந்த முடிவுகளில் பங்கேற்பதற்கான மக்களின் உரிமை குறித்தும் தேசிய அளவில் விவாதத்தை ஏற்படுத்தியது.

இந்தப் போராட்டத்தின் விளைவுகள் அணுசக்தியை வெளிப்படையாகவே ஆதரிக்கும் சி.பி.எம். போன்ற கட்சிகளுக்கும் தொழில்துறைக்கு ஆதரவான தி.மு.க. போன்ற கட்சிகளுக்கும் அணுசக்தித் திட்டங்களின் மீது இருந்த ஈடுபாட்டினைக் குறைத்தன.

தேர்தல் அறிக்கைகளில் சுற்றுச்சூழல் என்று சித்தரிக்கப்படும் விடயங்களின் அடிப்படைகள், மின் உற்பத்தி நிலையங்கள், அதிவிரைவுச் சாலைகள், துறைமுகங்கள், மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான எதிர்ப்பு இயக்கங்களால் மட்டும் உருவாகவில்லை. இதற்கு முன்னர் நடைபெற்ற சமூகப் போராட்டங்கள், நிகழ்வுகள் ஆகியவற்றின் ஊற்றுக் கண்களிலிருந்தும் அவை உருப்பெற்றிருக்கின்றன.

பெரிய அளவில் நடைபெற்ற சில போராட்டங்களைப் பாருங்கள்: இலங்கை இறுதிப் போருக்கும் முள்ளிவாய்க்கால் படுகொலைக்கும் எதிரான போராட்டம் (2009), அணு உலைக்கு எதிரான போராட்டம் (2011-13), டெல்டா பகுதியில் மீதேன் எடுக்கும் திட்டத்திற்கு எதிரான இயக்கம் (2009-13), கொடைக்கானலில் யூனிலீவர் நிறுவனத்தால் உருவாகக்கூடிய பாதரசக் கழிவு குறித்துச் சமூக ஊடகப் பரப்புரையால் தூண்டப்பட்ட ஆவேசம் (2005முதல் நடந்துவருவது), எண்ணூர் கழிமுகத்தில் தொழில்துறை ஆக்கிரமிப்புகளுக்கு எதிரான மீனவர்களின் போராட்டம் (2015முதல் நடந்துவருவது), இளைஞர்கள் தலைமை ஏற்று நடத்திய ஜல்லிக்கட்டுப் போராட்டம் (2017 ஜனவரி), ஹைட்ரோகார்பன் திட்டத்திற்கு எதிராக நெடுவாசலில் உருவாகி (பிப்ரவரி 2017) டெல்டாவின் இதர மாவட்டங்களுக்கும் காட்டுத் தீ போலப் பரவிய போராட்டம், சலுகை சார்ந்த முதலாளித்துவத்தையும் தொழில்துறை மாசுபாட்டையும் எதிர்த்து ஸ்டெர்லைட்டுக்கு எதிராக 100 நாட்கள் நடந்த போராட்டம் (2018), சேலம் - சென்னை 8 வழிச்சாலைக்கு எதிராக விவசாயிகள் நடத்தும் போராட்டம் (2018 முதல் இன்றுவரை), கன்னியாகுமரியில் சர்வதேச கொள்கலன் பரிமாற்ற முனையம் அமைவதை எதிர்த்து மீனவர்களும் விவசாயிகளும் மேற்கொள்ளும் போராட்டம் (2018 முதல் நடந்துவருவது), காட்டுப்பள்ளி துறைமுக விரிவாக்கத்துக்கு எதிராக நடக்கும் மக்கள் இயக்கம் (2019 முதல் நடந்துவருவது). இந்தப் போராட்ட இயக்கங்கள் அனைத்துமே மாநில, மத்திய அரசுகளுக்கு எதிராக நடப்பவை என்பதுதான் இதில் சுவாரஸ்யமான தகவல்.

ஒன்றிய அரசு வடக்கை மையமாகக் கொண்டு இயங்குவதாகவும், தென்னிந்திய நலன்கள் குறித்து அது அலட்சியமாக இருப்பதாகவும் தமிழகத்தில் பலரும் கருதுகிறார்கள். மேலே சொன்ன திட்டங்கள் அனைத்தும் மத்திய அரசால் திணிக்கப்படுபவை என்றும், இவை தொலைவில் இருக்கும் யாருக்கோ நன்மை செய்வதற்காக உள்ளூர் இயற்கைச் சூழலையும் விவசாயிகளையும் மீனவர்களையும் பாதிக்கக்கூடியவை என்றும் மக்கள் கருதுகிறார்கள். உள்ளூர் வாழ்வாதாரங்களையும் வருமான வாய்ப்புகளையும் அடையாளங்களையும் அழித்து, பிரம்மாண்ட வணிகத்திற்கான உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கான மத்திய அரசின் முயற்சியாக இவற்றைப் பார்க்கிறார்கள்.

இதற்கிடையே, சென்னை வெள்ளப் பெருக்கு (2015), வார்தா புயல் (2016), ஒக்கி புயல் (2017), கஜா புயல் (2018), சென்னையின் தண்ணீர்ப் பஞ்சம் (2019) ஆகிய அதீதமான இயற்கைச் சீற்றங்கள் அதிகரித்து வரும் பருவநிலை சார்ந்த நெருக்கடியை நினைவூட்டி வருகின்றன. இத்தகைய பேரழிவுகள் தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் ஆற்றும் பலவீனமான எதிர்வினைகள் மத்திய அரசின் புறக்கணிப்பு, மாநில அரசின் சொதப்பல் என்னும் வாதங்களை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

கவலைக்குரிய இந்தப் பின்னணியில், திமுக, பாமக, மக்கள் நீதி மய்யம், நாம் தமிழர் ஆகிய கட்சிகள் இளைஞர்களைத் தலைவர்களாகக் கொண்ட சுற்றுச்சூழல் பிரிவுகளைத் தமது கட்சிகளில் உருவாக்கியிருப்பது நம்பிக்கை அளிக்கிறது. இந்தப் பிரிவுகள் சூழலியல் குறித்த இந்தக் கட்சிகளின் முனைப்புகளைக் கூட்டுவதுடன் சூழலியல் பேரழிவின் மாபெரும் அபாயத்தை அரசியல்வாதிகள் உணரவும் உதவும். இந்தப் பிரிவுகளின் இளம் தலைவர்கள் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தொல். திருமாவளவன் போன்ற அறிவார்த்தமான தலைவர்கள் எடுத்துரைக்கும் சமூக நீதி, சாதிய அதிகாரப் படிநிலைகள், முற்போக்குத் தமிழ் இயக்கங்களின் வரலாறு ஆகியவற்றை ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும். இல்லையேல், தூய்மை, தகுதி ஆகிய கருத்தாக்கங்களில் மட்டுமே வேர்கொண்ட சுற்றுச்சூழலியமாக அமைந்து மேட்டிமைவாத அடக்கு முறையாக மாறிவிடக்கூடிய அபாயம் இருக்கிறது.

எதிர்காலம் அச்சமூட்டுகிறது. கடுமையான வெப்ப அலைகள் வீசக்கூடும் என்று அமெரிக்கன் ஜியோபிசிக்கல் யூனியனின் இதழில் அண்மையில் வெளியான கட்டுரை ஒன்று எச்சரிக்கிறது. "பூமி தொடர்ந்து வெப்பமயமாகிவருவதால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் இருக்கட்டும் ஏற்கனவே தெற்காசியாவின் சில பகுதிகள் வெப்பத்தால் உருவாகும் அபாயகரமான மன அழுத்தங்களை இப்போதே எதிர்கொண்டு வருகின்றன" என்றும் அந்தக் கட்டுரை கூறுகிறது.

பாரிஸ் ஒப்பந்தம் இலக்காக நிர்ணயித்திருக்கும் 1.5 செல்சியஸுக்குள் வெப்ப நிலை உயர்வு கட்டுப்படுத்தப்பட்டாலும் தமிழகக் கடலோரப் பகுதிகளில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அபாயகரமான வெப்ப அலைகள் உருவாகும்.

2020ஆம் ஆண்டில் உலகின் வெப்ப நிலை, உலகில் நவீன தொழிற்சாலைகள் உருவாவதற்கு முன்பு இருந்த சராசரி வெப்ப நிலையைக் காட்டிலும் 1.2 டிகிரி உயர்ந்திருந்ததாக உலக வானிலை அமைப்பு கூறுகிறது. இதே வேகத்தில் கழிவு வெளியேற்றப்பட்டால், உலக வெப்ப நிலை 2030ஆம் ஆண்டிற்குள் 1.5 டிகிரி என்னும் அபாயப் புள்ளியைத் தாண்டிவிடும்.

அடுத்த பத்தாண்டுகளுக்குக் கழிவு வெளியேற்றத்தை ஆண்டுக்கு 7.6 சதவீதம் என்னும் அளவில் குறைத்தால் தான் 1.5 டிகிரி என்னும் எல்லைக்குள் வெப்ப உயர்வைக் கட்டுப்படுத்தி, மிகக் கடுமையான விளைவுகள் ஏற்படுவதைத் தடுக்க முடியும். 2020இல் உலகம் முழுவதும் பொது முடக்கம் அமலில் இருந்தபோதிலும் கழிவு வெளியேற்றம் வெறும் 6.4 சதவீதம்தான் குறைந்திருந்தது என்று நேச்சர் இதழ் குறிப்பிடுகிறது.

நவீனப் பொருளாதாரம், பூமியையே அச்சுறுத்தக்கூடிய கரிமக் கழிவுகளையும் சீரழிக்கும் நிலப் பயன்பாட்டு மாற்றங்களையும் அபாயகரமான வகையில் சார்ந்திருக்கிறது. 2019இல் 153 நாடுகளைச் சேர்ந்த 11,258 வல்லுநர்கள் "பருவநிலை நெருக்கடிநிலை குறித்த எச்சரிக்கை"யை விடுத்தார்கள்.

"மொத்த உற்பத்தி வளர்ச்சி, வசதி படைத்தோரின் நோக்கங்கள் ஆகியவற்றிலிருந்து விலகி, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்தல், சமத்துவமின்மையைக் குறைத்தல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் மானுட நல வாழ்வை மேம்படுத்துவதை நோக்கியதாக நமது இலக்குகள் மாற வேண்டும்" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஹைட்ரோகார்பன் எடுத்தல், அதிவிரைவுச் சாலைகள், மாபெரும் துறைமுகங்கள் ஆகியவற்றுக்குப் பதிலாக வேளாண்மை, வனங்கள், மீன் வளம், தண்ணீர் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் தமிழக அரசியல் அத்தகைய மாற்றத்தைத் தொடங்கிவைத்திருக்கிறது. மக்களின் அபிலாஷைகள், நிலத்துடனான உறவு ஆகிய மதிப்பீடுகளுடன் கூடிய அரசியல் என்பது ஆழமானது.

கட்சிகள், அரசியல்வாதிகள், தேர்தல் அறிக்கைகள் ஆகியவற்றின் சுற்றுச்சூழலியம் என்பது மேம்போக்கானது, கூடுதலான உழைப்பைக் கோருவது. காட்டுப்பள்ளித் துறைமுகத்தையும் எட்டு வழிச் சாலையையும் எதிர்க்கும் கட்சிகள் நிலக்கரியின் மூலம் மின்சாரம் தயாரிக்கப்படும் அனல் மின் நிலையங்கள், கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள், சென்னையில் இரண்டாவது விமான நிலையம் ஆகியவை குறித்த வாக்குறுதிகளை அளிப்பதில் உள்ள முரண்பாட்டை உணர்வதில்லை.

சமூகத்தின் முன் உள்ள பணி மிகவும் கடினமானது. சூழலைப் பாழாக்கக்கூடிய, ஆவேசமான ஈடுபாடு கொண்ட பொருளாதாரப் பாதையிலிருந்து முற்றிலுமாக விலகுவதற்கான மாற்றுப் பாதையை மக்கள் உருவாக்க வேண்டும். சூழல் சீர்குலைவைத் தவிர்ப்பதற்கான இந்தப் பாதை பொருளாதார ரீதியாகப் பாதகமானது என்பதால் இது மாபெரும் சவாலாக நிற்கிறது.

நன்றி : பி.பி.ஸி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# தேங்காய் எண்ணெய் கலப்படம்: என்னதான் நடக்கிறது நாட்டில்?

சேகு

பாம் எண்ணெய் இறக்குமதி, முள்ளுதேங்காய் உற்பத்தியை தடை செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக முதலில் அறிவித்தது. பின்னர் பாம் எண்ணெய் இறக்குமதிக்கு அனுமதி வழங்கியது. ஆனால், முள்ளுத்தேங்காய் பயிர்செய்கைக்கு தடை விதித்துள்ளது.

பாம் எண்ணெய் தடை தொடர்ந்திருந்தால் அது தற்போதுள்ள பல சமூக - பொருளாதார பிரச்னைகளுக்கு இது ஒரு தீர்வாக அமைந்திருக்கும். அதுவும் சுத்தமான தேங்காய் எண்ணெயின் பிரச்னைக்கு முக்கிய தீர்வு கிடைத்திருக்கும். மாறாக தடை நீக்கம் பெரும் ஏமாற்றத்தை தந்துள்ளதாக கூறப்படுகின்றது.

ஆனால் , அரசின் முள்ளுதேங்காய் சாகுபடி தடை வரவேற்கக்கூடிய ஒன்று. முள்ளுதேங்காய் பயிர்செய்கை தடை பல பகுதிகளின் சுற்றுச் சூழல் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும். பாரம்பரிய பயிர்களான தேங்காய், இறப்பர் போன்றவற்றுக்கும் இது ஒரு நல்ல காலமாகவும் அமையும்.

1977 இல் திறந்த பொருளாதாரம் நிறுவப்பட்டதன் மூலம், ஏராளமான வெளிநாட்டு உற்பத்தி பொருட்கள் எங்களுடைய நாட்டை ஆக்கிரமித்தன. இது உள்ளூர் தொழிற்துறையை முடக்கியத்துடன் பாரம்பரிய பயிர்களுக்கு பெரும் தக்கத்தையம் ஏற்படுத்தியது. அது மாத்திரம் அல்லாது திறந்த பொருளாதாரக் கொள்கை முறையினால் எங்களுடைய பொருளாதார கொள்கை திரிவடைந்தது.

பாம் ஒயில் என்பது பொது மக்களிடையே பிரபலமான மரக்கறி எண்ணெயாக பெயர்பெற்றுள்ளது. இது மரக்கறி எண்ணெய் என்று அழைக்கப்பட்டாலும், எந்த தாவரத்திலிருந்தும் எடுக்கப்படும் எண்ணெயையும் பாம் எண்ணெய் என்று அழைக்கலாம்.

இலங்கைக்கு பாம் எண்ணெய் இறக்குமதி 1985 இல் தொடங்கியது. அப்போதிருந்தே, உணவு உற்பத்திகளுக்கு பாம் எண்ணெய் பயன்படுத்தப்பட்டு, பின்னர் தேங்காய் எண்ணெயுடன் கலப்படம் செய்யவதை ஆரம்பித்தனர். இதற்கு பின்னர்தான் தூய தேங்காய் எண்ணெய் என்ற விடயம் பேசுபொருளாக மாறுகின்றது. கடந்த காலங்களில் பாம் எண்ணெய் இறக்குமதியை ஊக்குவிக்க வரிச் சசலுகைகளும் வழங்கப்பட்டது. இதனால் தேங்காய் எண்ணெய்க்கு மாற்றாக பாம் எண்ணெய் உள்ளது. பாம் எண்ணெயின் தரம் தொடர்பிலான எந்த பரிசோதனைகளும் இங்கு இல்லை.

இது இவ்வாறு இருக்கையில் 1940களில் இலங்கை உலகின் சிறந்த தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்யும் நாடு என்ற நற்பெயரைப் பெற்றிருந்து. அந்தக் கால கட்டத்தில் கொழும்பு துறைமுகத்திலிருந்து உலகின் ஏனைய நாடுகளுக்கு மிகச் சிறந்த தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டது.

ஆனால் 1980ஆம் ஆண்டு ஆகும் போது அந்த நிலைமை மாற்றம் அடைந்தது. நாட்டின் நுகர்வோருக்கு தேவையான அளவு தேங்காய் எண்ணெயை இங்கு உற்பத்தி செய்ய முடியாமல் போனது. அதனால் வேறு நாடுகளில் இருந்து தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது. வேடிக்கை என்னவென்றால் வெளிநாடுகளில் இருந்து தேங்காய் இறக்குமதி செய்யப்பட சந்தர்ப்பங்களும் உள்ளது.

இலங்கையில் தேங்காய் உற்பத்திக்கு தடையாக முள்ளுத்தேங்காய் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதன் ஒரு பகுதியாக இறப்பார், தென்னம் தோப்புகள் முள்ளுத் தேங்காய் நடுவதற்காக பயன்படுத்தப்படுகின்றது. மேலும் முள்ளுத் தேங்காய்களை பயன்படுத்தி பாம் எண்ணெய் தயார் செய்யப்பட்டது.

இலங்கையில் முதன் முதலில் காலி, நக்கினிதெனியவில் முள்ளுத் தேங்காய் நடப்பட்டது. சுமார் 2000 ஏக்கர் அதற்காக பயன்படுத்தப்பட்டது. இந்த ஆரம்பக் கட்டங்களுக்கு பினார்தான் தெரியவந்து முள்ளுத் தேங்காயினால் ஏற்படும் சூழல் பாதிப்புக்கள். அவற்றில் முக்கியமாக நீர் ஆதாரங்கள் முழுமையாக இல்லாமல் சென்று வறண்ட பகுதியாக மாறிவிடும். மேலும் பாம் எண்ணெய் உற்பத்தியாகும் பகுதியில் முழுமையான சூழல் மாசடைவையும் ஏற்படுத்தும். இப்படியான காரணிகள் இருந்தும் தொடர்ச்சியாக பயிர்செய்கை இடம்பெறுகின்றது. பாம் எண்ணெயும் இறக்குமதி செய்யப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் புற்று நோய்க்கான நச்சுத் தன்மை இருப்பதாக அண்மையில் தெரிய வந்தது. ஆனால், அதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் தரம் தொடர்பில் ஆக்கபூர்வமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு நச்சுத் தன்மை இருப்பதாக அறிவிக்கப்படவில்லை.



இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் தரம் தொடர்பில் ஆராய்வதற்கு பல அரச நிறுவனங்கள் இருந்தன. இது போன்ற ஒரு விடயம் நடந்ததற்கான பொதுவான தகவல்கள் இல்லை என்பதுதான் உண்மை. அதற்கான முக்கிய காரணம் ஒன்று முறையான சோதனை இடம்பெற வில்லை. அல்லது பரிசோதனை செய்யவிடாமல் அரசியல் அழுத்தங்கள் வந்திருக்கலாம். இப்போது வெளியாகி யுள்ள தகவல்களினால் மக்கள் பொருட் களின் தரம் தொடர்பில் அறிந்து கொள்ள அதிகம் அவதானத்தை செலுத்துகின்றனர். இது மிகவும் முக்கியமானது. வெளிநாடுகளில் இருந்து வரும் எந்த ஒரு பொருளையும் அப்படியே உள்வாங்கிக்கொள்வதும், அதற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கும் நாம் பழகிக்கொண்டுள்ளோம்.

இதற்கு முக்கியகாரணம் திறந்த பொருளாதார முறைமைதான். அதன் ஊடாக பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. 1977 க்கு பின்னர் இலங்கை சந்தையில் சர்வதேச தயாரிப்பு பொருட்கள் நிறைய ஆரம்பித்தது குறிப்பாக உணவுப் பொருட்கள். நகைகள், வாகன தயாரிப்புகள், இலத்திரனியல் பொருட்கள் எண்ணெய் வகைகள், பொம் மைகள் கூட இறக்குமதி செய்யப்பட் டன. இவை அனைத்திலும் ஒரு மோச மான விளைவு இருக்கின்றது. அது என்ன வெனில் போட்டித்தன்மை அதிகம் ஏற்படுவதால் தரமற்ற பொருட்களை இறக்குமதி செய்யும் நிலைமை ஏற்படும். அதன் ஊடாக பல பாதிப்புகள் ஏற்படும். அதனோடு நிற்காமல் இரசாயனம் கலந்த அல்லது விஷ பதார்த்தங்கள் கலந்த பொருட்கள் மக்கள் பாவ னைக்கு விடப்படும் சுழலும் ஏற்படுகின் றது.

இது போன்ற செயற்பாடுகளால் எங்களுடைய நாட்டின் உற்பத்தி பொருட்களுக்கு கிடைக்கவேண்டிய இடம் இல்லாமல் போகும். விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். மக்கள் சிக்கலுக்குள் தள்ளப்படுவார்கள். உற்பத்திகள் இல்லாமல் போகும்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கும் வரும்போது போது, உள்நாட்டு உற்பத்திகளைஅதிகரிப்போம் என்று கூறியது. அதேபோன்று, இறக்குமதி செய்யப்படும் பொருட்களை மட்டுப்படுத்துவோம் என்றும் சொன்னது. இதன் ஒரு கட்டமாக தானியங்கள், மசாலா பொருட்களின் இறக்குமதிக்கு தடை விதித்தது. இது வரவேற்க தக்க ஒன்று. இதன் காரணமாக மக்களுக்கு குறித்த பொருட்களை பெற்றுக்கொள்வதில் இடைக்கால சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க பாரிய அளவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் தடைகளோ அல்லது கட்டுப்பாடுகளோ விதிக்கப்படவில்லை. அதன் விளைவுகள் இப்போது பாரதூரமாக உள்ளது. இன்று மக்கள் அச்சத்துடன் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யவேண்டிய சூழல் உள்ளது. கலப்படம் தொடர்பிலும் மக்கள் அவதானத்தை செலுத்தும் காலகட்டமாக மாறியுள்ளது. இந்த கலப்பட சிக்கல் மிக மோசமாக தேங்காய் எண்ணையில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதில் புற்றுநோய் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளது என்ற அறிவிப்பும் வந்துள்ளது.

முன்னரும் ஒரு தடவை பாம் எண்ணெய் இறக்குமதிக்கு அரசாங்கம் தடை விதித்தது. அதனுடன் சேர்ந்தது அதற்கான மரங்களை நடுவதற்கும் தடை விதித்தது. பின்னர் அழுத்தம் காரணமாக அந்த இறக்குமதி தடை தற்காலிகமாக அகற்றப்பட்டது.

இந்த விடயங்களில் யாருக்கு நட்டம், அல்லது யாருக்கு இலாபம்? எப்படியாது இலாபம் கிடைக்கவேண்டும் என்று நிறுவனங்கள் இறக்குமதியில் ஈடுபடுகின்றன. அதன் ஊடக சில அரசியல்வாதிகளுக்கும் இலாபம் உள்ளது. அதன் பிரதிபலிப்பே தற்போதைய தேங்காய் எண்ணெய் சிக்கல். இன்னும் ஒன்று உள்ளது. அரசியல்வாதிகள் தங்களுக்கு சாதகமானவர்களுக்கு சலுகையை வழங்கவும், அவர்களுக்கு நன்றி கடன்களை செலுத்தவும் சில விடயங்களுக்கு அனுமதிகளை வழங்குகின்றனர். எவ்வாறு இருப்பினும் இறக்குமதியிலோ, தரத்திலோ, அல்லது வேறு சிக்கல் ஏற்படும் போது தங்களை பாதுகாக்க அரசியல் பிரதிநிதிகள் பந்தை வேறு பக்கம் மாறிவிடுகின்றார்கள்.

இறுதியில் இலாபமோ நட்டமோ இரண்டையும் பொறுப்பேற்க மக்கள் தயாராக இருக்கவேண்டும். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மக்கள் இக்கட்டான ஒரு நிலைமைக்கு தள்ளப்படுகின்றார்கள். இவை அனைத்திற்கும் ஒரு முக்கிய காரணம் பொருளாதார முறைமை. இது சரியாக கையாளப்படுமாயின் இன்று இருக்கக்கூடிய சிக்கலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். இல்லையென்றால் நிலைமை மிகவும் மோசமடையும். மக்களுக்கு சிறந்த பொருட்களை வழங்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. அதே போன்று அந்த சிறந்தவை மக்களுக்கு சரியானவையா எனது தொடர்பில் உத்தரவாதத்தை தர நிர்ணய சபை வழங்கவேண்டும். இது தவறும் பட்சத்தில் அனைத்தும் மாறிவிடும் என்பதுதான் உண்மை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**36B**

**2010 21**

02A. வெற்றுப்பகுதியை நுண்ணறிவு கொண்டு நிரப்ப முற்படல்.








தடிப்பான கறுப்புக் கோட்டினால் துண்டாடப்பட்டுள்ளது.ஒவ்வொரு துண்டிலும் உள்ள எண்கோலமானது 1 இனால் அதிகரிக்கினறது. A உள்ள நிலை-க்குத்து நிரலில் A கீழே 11 அடுத்து 12.எனவே A யினது பெறுமானம் 10 ஆகும். எனவே சரியான விடை 2

**2010 22**




B யினது கிடையான துண்டிலும் உள்ள எண்கோலமானது 1 இனால் அதிகரிக்கின்றது. 7,8,9,10,11,B .இதனால் B யினது பெறுமானம் 12 எனவே சரியான விடை 1

**2011 05**

**கவிதையில்**

வீசும் தென்றல் காற்று உடலுக்குக் குளிர்ச்சி தரும்
என்பதற்கு ஏற்ப காலையில் வீசும் காற்று உடலுக்கு குளிர்ச்சி தரும்.
எனவே சரியான விடை 2

**2011 06**

காலையில் நடைபெறும் நிகழ்வுகள்

*சிறகடிக்கும் பறவைகளின் கீத ஒலி கேட்கும்*
*வீசும் தெனறல் காற்று உடலுக்கு குளிர்ச்சி தரும்.*
*மலரும் மலர்களோ எங்கும் மணம் பரப்பும்*
*அதிகாலைப் பொழுதோ இன்பம் ஊட்டும்*

இதனில் கவிதையில் கூறப்படாத ஆனால் காலையில் நடைபெறும் இன்னுமொரு நிகழுவுதான் ஒளி மெதுவாகப் பரவுதல்.
எனவே சரியான விடை 3

**2011 07**

02C .இலக்கணத்திற்கு அமைவான சரியான தமிழ் வாக்கியத்தினை தெரிவு செய்தல் இவற்றியினால் முதலில் மகிழ்ச்சி ஏற்படுகிறது.அதன் பெறுபேறாக துண்டற்பேறாக கைதட்டி ஆரவாரிப்பர்.
எனவே சரியான விடை 1

**2012 07**

*மரங்காடியினைத் தழுவி வரும் தென்றல் காற்று சுகம் தரும்*
*உரமான எம் உடல் உள்ளத்திற்கு புத்துணர்வையும் தரும்*

எமது உடலுக்கும் உள்ளத்திற்கும் புத்துணர்வை ஏற்படுத்துவது தென்றல்காற்று
எனவே சரியான விடை 2

**2012 08**

இக் கவிதையின் கருப்பொருள் சூழலில் மரங்கொடிகளைப் பாதுகாத்தல்

இநத *உண்மையை உணர்ந்து மரங் கொடிதனை எம்முயிர்போல்*
*காக்கும் கடமையைச் செய்வதே உன்னத செயலாம்*

எனவே சரியான விடை *3*

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

பொய்க் குற்றச்சாட்டு மூலம்

# அரசாங்கத்தை ஒருபோதும் பலவீனப்படுத்த முடியாது!

காமினி லொக்குகே உறுதி



**கொழும்பு,ஏப்.10**

**போலிக் குற்றச்சாட்டுக்கள் மூலம் அரசாங்கத்தை ஒருபோதும் பலவீனப் படுத்த முடியாது. தேர்தல் காலத்தில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறு திகள் பல நிறைவேற்றப்பட்டுள்ளன. அரச நிர்வாகத்தில் ஒரு சில குறைபாடு கள் காணப்படுகின்றன. குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்னெடுப்போம் எனப் போக்குவரத்துத்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.**

*பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.*

*அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்:*

*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். 2019 ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்தைப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து பல சவால்கள் ஏற்பட்டன. பூகோள மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய கொரோனா வைரஸ் தாக்கம் தற்போது சிறந்த முறையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.*

*அரசாங்கம் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்க ஆரம்பத்திலிருந்து பொறுப்புடன் செயல்பட்டுள்ளது. பலம் வாய்ந்த நாடுகளால் கூட கட்டுப்படுத்த முடியாத வைரஸ் பரவலை அரசாங்கம் குறுகிய காலத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. கொரோனா தடுப்பூசி பெருந் தொகையான மக்களுக்குச் செலுத்தப்பட்டுள்ளன. தடுப்பூசி செலுத்தும் இரண்டாம் கட்ட நடவடிக்கை இம் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.*

*எதிர்க்கட்சியினர் பல பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசாங்கத்தை பலவீனப்படுத்த முயற்சிக்கின்றனர். அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் பலவற்றை குறுகிய காலத்தில் செயல்படுத்தியுள்ளோம். சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்ட உள்ளடக்கத்தை 2023 ஆம் ஆண்டுக்குள் முழுமையாக செயல்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.*

*மாகாண சபைத் தேர்தலில் கூட்டணியாக ஒன்றிணைந்து போட்டியிட எதிர்பார்த்துள்ளோம். ஆளுங் கூட்டணிக்குள் ஒரு சில கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. பேச்சு மூலம் முரண்பாடுகளுக்குத் தீர்வு காணப்படும்- என்றார்.*

*(எ)*



# சட்டத்தரணி அருள்பிரகாசம் தலைமையில் நோட்டரி ஆலோசனைக்குழு நியமனம்

*கொழும்பு,ஏப்.10*

*சட்ட நடவடிக்கைகளை மேலும் விரைவுபடுத்தும் நோக்கில் நீதியமைச்சின் கீழ் திட்ட வழிநடத்தல் பிரிவொன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள நிலையில், நீதியமைச்சின் சட்டத்தரணி ஜி.ஜி.அருள்பிரகாசத்தின் தலைமையில் நோட்டரி ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.*

*மேற்படி குழுவின் உறுப்பினர்கள் நீதியமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், பதிவாளர் திணைக்களம், சட்டவரைஞர் திணைக்களம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*சட்டத்தரணிகள் கட்டளைச் சட்டங்கள், நோட்டரி கட்டளைச் சட்டம், ஆவணங்களின் பதிவு தொடர்பான சட்டம் உள்ளிட்டவற்றில் திருத்தங்களை மேற்கொள்வது குறித்து மேற்படி கட்டமைப்புக்களின் உறுப்பினர்களால் ஆராயப்படும்.*

*இந்தச் சட்டங்கள் சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தில் நடைமுறைக்கு வந்ததுடன் இதன் பின்னர் சில சட்டங்களில் திருத்தங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)*

# 98 கடவுச்சீட்டுக்களுடன் மூவர் பொலிஸாரால் கைது

*கொழும்பு,ஏப்.10*

*98 கடவுச்சீட்டுக்களை வைத்திருந்த மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.*

*இதேவேளை, குறித்த கடவுச்சீட்டுக்களின் உரிமையானவர்களை சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைப்பதற்கு குறித்த நபர்கள் முயன்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*மேலும், சந்தேக நபர்களிடமிருந்து இரண்டு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.*

*(எ)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்குள் புகுந்த கும்பல் மாணவர்களின் மீது தாக்குதல்!

## தெல்லிப்பழையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

**யாழ்ப்பாணம், தெல்லிப்பழை பகுதியிலுள்ள பாடசாலையொன்றுக்குள் நேற்றுக்காலை அடாத்தாக புகுந்த கும்பலொன்று மாணவர்களின் மீது தாக்குதல் மேற்கொண்டது. இதில் காயமடைந்த சில மாணவர்கள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.**





மாணவர்கள் துவிச்சக்கரவண்டிகளை நிறுத்தும் இடம் தமக்குச் சொந்தமானது எனவும் அதில் துவிச்சக்கரவண்டிகளை நிறுத்த வேண்டாம் எனக்கூறியே மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக இந்தக் காணிப் பிரச்னை நடைபெற்று, தற்போது அந்த நிலம் கல்லூரிக்கு சொந்தமானது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இந்நிலையில், நேற்றுக் காலை பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் அங்கு சென்ற குறித்த குழுவைச் சேர்ந்தவர்கள் மாணவர்கள் வாகனங்களை நிறுத்தும் இடத்துச் செல்ல முடியாதவாறு தடிகளை போட்டு பாதையை மறித்திருந்தனர். எனினும், அங்கு ஆசிரியர்கள் வருகை தந்த பின்னர் மாணவர்கள் வாகனங்களை உள்ளே நிறுத்தியபோது மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் ஐந்து மாணவர்கள் காயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ)

# முதல்வர் மணிவண்ணன் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்து

வவுனியா,ஏப்.10

குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தியுள்ளார்.

மணிவண்ணனின் கைது குறித்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: தமிழர்களின் நிர்வாக திறமையை சகித்துக் கொள்ள முடியாத சிங்கள அரசு யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனை கைது செய்துள்ளது.

கைது செய்யப்பட்ட யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். அதேநேரம் யாழ். மாநகரத்தை சுத்தப்படுத்தும் நோக்கில் உருவாக்கிய காவல் படையை சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிக்க வேண்டும்.

இத்தனை வருடங்களாக ஆட்சி செய்து கொண்டிருக்கும் இந்த அரசினால் ஒரு மாநகர சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கும் செயல்பாட்டை செய்ய முடியவில்லை.

அதனை ஒரு தமிழன் செய்துவிட்டான் என்ற காழ்ப்புணர்ச்சியில் இந்த கைது நாடகம் அரங்கேறியுள்ளது. சீருடை காரணமாக யாழ். மாநகர காவல் படையை தடைசெய்து முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனை கைது செய்துள்ளது சிறுபிள்ளைத்தனமாகவுள்ளது.

யாழ். மாநகர காவல் படையினரின் இதே வகையிலான சீருடை கொழும்பு மாநகர சபையிலும் உள்ளதாக மணிவண்ணன் விளக்கமளித்துள்ளார்.

அவ்வாறு விளக்கமளித்தும் மணிவண்ணனை கைது செய்திருப்பது இந்த அரசு தமிழர்கள் எந்த வகையிலும் முன்னேறி விடக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது.

சாதாரண சீருடையை பார்த்து அரசாங்கம் அச்சம் கொள்வது எதற்காக என்று எமக்குத் தெரியவில்லை. எனவே, கைது செய்யப்பட்ட யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனை உடனடியாக விடுதலை செய்வதோடு யாழ். நகரை சுத்தப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட மாநகர காவல் படையை சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று இந்த வேளையில் கேட்டுக்கொள்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

# வேறு எந்த உணவுப்பொருள்களில் புற்றுநோய் மூலக்கூறுகள் உள்ளன

## ஜனாதிபதி வெளிப்படுத்த வேண்டும் - ஹிருணிகா

கொழும்பு,ஏப்.10

இலங்கை தர நிர்ணய கட்டளை நிறுவனத்தின் பிரதானி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆவார். எனவே, தேங்காய் எண்ணெய் தவிர வேறு எந்த உணவுப் பொருள்களில் புற்றுநோய் மூலக்கூறுகள் உள்ளடங்கியுள்ளன என்பதையும், அவற்றை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் தொடர்பிலும் நாட்டு மக்களுக்கு விரைவில் வெளிப்படுத்த அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



கடந்த வருடம் கொரோனா தொற்று அச்சம் காரணமாக தமிழ் - சிங்கள புத்தாண்டை நாட்டு மக்களுக்கு கொண்டாட முடியாமல் போனது. எனினும், இந்த ஆண்டு புற்றுநோய் மூலக்கூறுகள் அடங்கிய எண்ணெய் இறக்குமதி அச்சத்தில் மக்களால் புத்தாண்டை மகிழ்ச்சியாகக் கொண்டாட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் மிக்க இந்த விவகாரத்தை நகைச்சுவையாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று அரசாங்கத்தை கோருகின்றோம். அத்தோடு இலங்கை தர நிர்ணய கட்டளை நிறுவனத்தின் பணிப்பாளர் மேலும் சில உணவுப் பொருள்களிலும் புற்றுநோய் மூலக்கூறுகள் இருப்பதாகக் கூறினார். அந்த உணவுகள் என்ன என்பதை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

# சர்வதேச விமான நிறுவனங்கள் இலங்கைக்கு மீள நேரடி சேவை

கொழும்பு,ஏப்.10

கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டதை அடுத்து 11 சர்வதேச விமான நிறுவனங்கள் மீண்டும் நேரடி விமான சேவைகளை ஆரம்பித்திருப்பதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கட்டார் விமான சேவை, எமிரேட்ஸ் - துருக்கி விமான சேவை, குவைத் விமான சேவை, உக்ரைன் விமான நிறுவனம், ஓமான் விமான நிறுவனம் ஆகியன இதில் இடம்பெற்றுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்று பரவலுக்கு முன்னர் 2019 - 2020 காலப்பகுதியில் 35 விமான நிறுவனங்கள் இலங்கையுடன் விமான சேவைகளை மேற்கொண்டிருந்தன. (எ)

# தேரருக்குப் பிணை

கொழும்பு,ஏப்.10

கொழும்பு, கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஜம்புரேவெல சந்திரரத்ன தேரர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸ் வாகனமொன்றை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.இந்நிலையில் நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்ட தேரர் மாலை பிணையில் விடுவிக்கப்பட்டார். (எ)

# மருந்து உற்பத்தி நிறுவனங்களுடன் இலங்கை விரைவில் உடன்படிக்கை

## அமைச்சர் பவித்ரா தகவல்

கொழும்பு,ஏப்.10

கொரோனா தடுப்பூசி ஏற்றுவதற்காக மருந்து உற்பத்தி நிறுவனங்களுடன் விரைவில் உடன்படிக்கை செய்து கொள்ளப்படும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை இதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.



பைசர் நிறுவனத்தினூடாக 7 மில்லியன் கொரோனா தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப் பட்டுள்ளது.

மொடேனா, ஜோன்ஸ்சன் அன்ட் ஜோன்ஸ்சன் போன்ற நிறுவனங்களுடனும், அமெரிக்கத் தூதரகத்தின் ஒருங்கிணைப்புடனும் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடல் இடம்பெற்றிருப்பதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (எ)

புதிய அரசியலமைப்பில்
சைவ சமயத்துக்கு முன்னுரிமை கொடுக்க
மதமாற்றத் தடையை உள்ளடக்குக
மாடுகளை வெட்டத் தடையை உள்ளடக்குக
සෛවාගමට ප්‍රමුඛතාවක් දෙන්න.
ආගම් වෙනස් කිරීම තහනම් කරන්න.
ගව ඝාතයට එරෙහිව තහනම් නියෝගයක් පනවන්න.



தவத்திரு விபுலானந்த அடிகளார்
129ஆவது பிறந்த நாள், பங்குனி பூரட்டாதி (10.04.2021)
இலங்கையின் 12 மாவட்டங்களில் 16 திருக்கோயில்களில்
தவமிருக்கிறோம் - உண்ணாநோன்பு நோற்கிறோம் - வழிபடுகிறோம்
மூன்று கோரிக்கைகளை முன் வைக்கிறோம். ஆதரிப்பீர்.
மறவன்புலவு க. சச்சிதானந்தன் +94 772 754 864

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் குற்ற விசாரணைக்கு ஒத்துழைக்கவே மாட்டோம்!

## இஸ்ரேல் திட்டவட்ட அறிவிப்பு



ஜெருசலேம், ஏப். 10

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பிரதேசங்களின் நிலைமை குறித்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் போர் குற்ற விசாரணைக்கு ஒத்துழைக்கமாட்டோம் என்று தீர்க்கமாக முடிவு செய்யப்பட்டுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்ற தலைமை வழக்கறிஞர்கள் மார்ச் 3ஆம் திகதி இஸ்ரேல் ஆக்கிரமித்த பிரதேசங்களின் நிலைமை குறித்து முழு விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக அறிவித்தனர். சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் இந்த அறிவிப்புக்கு பதிலளிக்க இஸ்ரேலுக்கு ஏப்ரல் 9 (நேற்று) வரை காலக்கெடு வழங்கப்பட்டது.

இந் நிலையில் இந்த காலக்கெடுவிற்கு முன்னர் நாட்டின் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளை சந்தித்த பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, விசாரணைக்கு இஸ்ரேல் ஒத்துழைக்காது என்றும் அதற்கான பதிலை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு அனுப்பும் என்றும் வியாழக்கிழமை இரவு கூறியுள்ளார்.

அது மாத்திரமன்றி இஸ்ரேல் போர்க் குற்றங்கள் செய்கிறது என்ற கூற்றை முற்றிலுமாக நிராகரிப்பதாகவும் அவர் கூறினார். இந்த அறிவிப்பு, ஹேக் தீர்ப்பாயத்திற்கு விசாரணையைத் திறக்க அதிகாரம் இல்லை என்ற இஸ்ரேலின் தெளிவான நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# 3000 ஆண்டு பழமையான 'இழந்த தங்க நகரம்' மீட்பு

கெய்ரோ, ஏப். 10

3000 ஆண்டுகள் பழமை வாய்ந்த எகிப்தின் 'இழந்த தங்க நகரம்' தொல்லியல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் கெய்ரோவில் இருந்து 300 கி.மீ. தெற்கே லஸ்கர் என்ற பகுதியிலுள்ள கிங்ஸ் பள்ளத்தாக்கிலேயே இந்த நகரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'இழந்த தங்க நகரம்' என்று சிறப்பு பெயரால் அழைக்கப்பட்ட இந்த நகரம் இதுவரை கண்டுபிடிக்கப்படாதிருந்த பண்டைய நகரமாகும். இந்த நகரம் ஏடன் என்று அழைக்கப்படுகின்றது.

2020 செப்ரெம்பரில் அகழ்வாராய்ச்சி தொடங்கிய சில வாரங்களுக்குள் இந்த நகரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எகிப்தின் மிகவும் சக்தி வாய்ந்த பாரோக்களில் (அரசர்களில்) ஒருவரான 3ஆம் அமென்ஹோரெப் கி.மு. 1391 - 1353 வரை இந்த நகரிலிருந்தே ஆட்சி செய்தார்.

இந்த நகரிலிருந்தே துட்டன்காமூன் என்ற அரசனின் கல்லறை 1922ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு அகற்றப்பட்டது. துட்டன்காமூனின் கல்லறைக்குப் பின்னர் இரண்டாவது மிக முக்கிய கண்டுபிடிப்பாக இதனை ஆய்வறிஞர்கள் கருதுகிறார்கள்.

சாம்ராச்சிய காலத்தில் செல்வந்தர்கள் வாழ்ந்த நகரம் இதுவாகும். புதைபடிவ ஆராய்ச்சியின்போது நகைகள், வண்ண மட்பாண்டங்கள், 3ஆம் அமென்ஹோரெப்பின் முத்திரைகள் தாங்கிய சுடுமண் தட்டுகள் போன்ற ஏராளமான மதிப்புமிக்க தொல்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

பல வெளிநாட்டு தொல்பொருள் ஆய்வாளர்கள் இந்த நகரத்தை தேடி அலைந்தபோதும் பல காலமாக இந்த நகரம் கண்டுபிடிக்கப்படவில்லை என்று அந்த நாட்டின் தொல்பொருள் அமைச்சர் ஹவாஸ் தெரிவித்தார்.

மேலும், இந்தப் பகுதியில் புதையல்கள் நிரப்பப்படாத, இதுவரை யாரும் தொடாத - காணாத கல்லறைகள் கண்டுபிடிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# 20 ஏழை நாடுகளுக்கு ஒரு சொட்டு தடுப்பு மருந்துகூட கிடைக்கவில்லை!

நியூயோர்க், ஏப். 10



ஏழை நாடுகளுடன் ஒப்பிடுகையில் உலகின் சக்தி வாய்ந்த நாடுகளுக்கு 25 மடங்கு அதிவேகமாக தடுப்பு மருந்துகள் சென்று சேர்கின்றன என ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது. உலகின் பின்தங்கிய கண்டமான ஆபிரிக்காவில் 54 நாடுகள் உள்ளன. இவற்றில் இது வரை வெறும் மூன்று நாடுகள் மட்டுமே ஒரு சதவீதத்துக்கும் குறைவான மக்களுக்கு தடுப்பூசியை வழங்கியுள்ளன.

அத்துடன், 20இற்கும் மேற்பட்ட ஆபிரிக்க நாடுகளுக்கு இன்னும் ஒரு சொட்டு தடுப்பு மருந்து கூட சென்று சேரவில்லை எனவும் ப்ளூம்பெர்க் செய்தி நிறுவனம் மேற்கொண்ட அந்த ஆய்வில் தகவல் வெளியாகியுள்ளது.

உலகில் பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கு தடுப்புமருந்து சென்று சேர்வதில் தாமதம் ஏற்படுகிறது. இந்நிலையில் உலக சுகாதார அமைப்பின் கோவாக்ஸ் திட்டத்தின் மூலமாக ஆபிரிக்க மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு தடுப்பு மருந்து வழங்கி வருகிறது. இது தாமதமாக உள்ளதுடன், போதுமானதாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உலகின் 4.3 சதவீத மக்கள் தொகைகொண்ட வல்லரசு நாடான அமெரிக்காவில் உலகில் 24 வீத தடுப்பு மருந்துகள் அதிவேகத்தில் வினியோகிக்கப்பட்டுள்ளன என்று ப்ளூம்பெர்க் செய்தி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. அதேசமயம் பாகிஸ்தானில் 0.1 வீத தடுப்பு மருந்துகளே வினியோகிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# நித்தியானந்தா புதிய வேடம்! கிளம்புகிறது கடும் எதிர்ப்பு!!

புதுடில்லி, ஏப். 10

வெங்கடேச பெருமாளை போன்று வேடம் தரித்து நித்தியானந்தா வெளியிட்டுள்ள புதிய படங்களால் பெரும் சர்ச்சை வெடித்துள்ளது.

சர்ச்சைகளுக்கு பெயர் போன நித்தியானந்தா, தன்னை சிவபெருமானின் அவதாரம் என்று கூறி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தார். அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில், இந்தியாவிலிருந்து தப்பி அவுஸ்திரேலியா நாட்டின் தீவுக் கூட்டங்களில் ஒன்றில் தஞ்சமடைந்துள்ள அவர் கைலாசா என்று பெயரிட்டு தனி நாடாக அதனை அறிவித்திருந்தார்.

இந்நிலையில், தனது சமூகவலைத்தளத்தில் வெங்கடேச பெருமாளின் உருவத்தை ஒத்ததாக வேடம் தரித்த படத்தை வெளியிட்டுள்ளார். இதற்கு இந்து மக்கள் கடும் விமர்சனங்களையும் கண்டனங்களையும் எழுப்பியுள்ளனர்.





## பொது மக்களிடம் துப்பாக்கி:

# புதிய கட்டுப்பாடுகளை விதிக்கிறது அமெரிக்கா!

வாஷிங்டன், ஏப். 10

அமெரிக்காவில் பொதுமக்கள் துப்பாக்கி வைத்திருப்பதற்கு கட்டுப்பாடுகளை அதிகரிப்பதற்கான உத்தரவுகளை ஜனாதிபதி ஜோ பைடன் பிறப்பித்துள்ளார்.

அமெரிக்காவில் அண்மைக் காலமாக தனிநபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூடு சம்பவங்களில் பலர் உயிரிழந்தனர். இதையடுத்து துப்பாக்கி வைத்திருப்பதற்காக கட்டுப்பாடுகளை கடுமையாக்க வேண்டும் என்று கடும் அழுத்தம் ஏற்படுத்தப்பட்டது.

இந்நிலையிலேயே, பல்வேறு உத்தரவுகளை ஜோ பைடன் பிறப்பித்துள்ளார். பாராளுமன்ற அனுமதிகளை பெறத் தேவையில்லாத வகையில் - உடனடியாக நடைமுறைக்கு வரும் விதமாக அரசாணைகள் மூலமாக இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, பொதுமக்கள் உதிரிப்பாகங்களாக வாங்கி தாங்களே பொருத்தும் துப்பாக்கிகளின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்கவும் - அற்றுக்கு தடை விதிக்கவும் விதிமுறைகளை வகுக்க நீதித்துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், கைத் துப்பாக்கிகளை பெரிய வகை துப்பாக்கிகளாக மாற்றுவதற்கு தடையும், அதற்கான இணைப்புகளின் விற்பனையை கட்டுப்படுத்தவும் விதிமுறைகள் உருவாக்கப்படும். ஆபத்தானவர்கள் என்று கருதப்படுபவர்கள் வைத்திருக்கும் துப்பாக்கிகளை பறிமுதல் செய்வதற்கான பொது விதிமுறைகள் உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு வரும்.

எனினும், பொதுமக்கள் ஆயுதம் வைத்திருப்பதை அமெரிக்க அரசமைப்பு அடிப்படை சட்டடமாக வரையறுத்திருப்பதால், ஜனாதிபதியின் இந்த முடிவுக்கு சவால் ஏற்படுத்தப்படலாம் என்று கருதப்படுகின்றது. (ஐ)

# அமெரிக்காவில் துப்பாக்கிசூடு! ஒருவர் உயிரிழப்பு; ஐவர் காயம்!!



நியூயோர்க், ஏப். 10

அமெரிக்காவிலுள்ள ரெக்ஸ்சாஸ் பூங்காவில் மர்ம நபர் ஒருவர் நேற்று மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். 5பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.

இந்த சம்பவத்தால் அங்கு பெரும் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு உடனடியாக பொலிஸார் விரைந்த போதும், துப்பாக்கிச்சூட்டை நடத்திய மர்ம நபர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

ரெக்சாஸின் பிரையன் நகரப் பொலிஸார் சந்தேக நபரைத் தேடி வருவதோடு விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, அமெரிக்க மக்கள் துப்பாக்கி வைத்துக்கொள்ள அனுமதியுள்ளதால் அங்கு துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவண்ணன் கைதில் மகிழ்வோர் இனி தமிழ்த் தேசியம் பேச முடியாது

## மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பு,ஏப்.10

யாழ். மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனின் கைதில் மகிழ்ச்சியடைவோர் இனிமேல் தமிழ்த் தேசியம் பேச முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணனின் கைது குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தற்போதைய அரசாங்கத்தின் இவ்வாறான செயல்பாடுகள் குறித்தும் அவர் கடும் அதிருப்தி வெளியிட்டிருந்தார். (எ)



# பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றார் மன்னப்பெரும

கொழும்பு,ஏப்.10

பாராளுமன்ற உறுப்பினராக அஜித் மன்னப்பெரும நேற்றுக் காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் பதவியேற்றுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் ஆசனம் வெற்றிடமாகியுள்ள நிலையிலேயே அந்த இடத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் பட்டியலின் அடுத்த இடத்திலுள்ள அஜித் மன்னப்பெரும இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 47 ஆயிரத்து 212 விருப்பு வாக்குகளைப் பெற்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட விருப்பு வாக்குப்பட்டியலில் அஜித் மன்னப்பெரும ஐந்தாவது இடத்தில் உள்ளார்

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 4 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து கடந்த ஜனவரி 12 ஆம் திகதி தீர்ப்பளிக்கப்பட்ட நிலையில் அவர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தனது பாராளுமன்ற ஆசனத்தை இரத்துச் செய்வதைத் தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்கக் கோரி ரஞ்சன் ராமநாயக்க சார்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

எனினும், குறித்த ரிட் மனுவை கடந்த 5 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

இந்நிலையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட எம்.பியான ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகியுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அண்மையில் சபையில் அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ)

# பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தும் பாராளுமன்ற விசேடகுழு கூடிப்பேசியது

கொழும்பு, ஏப். 10

பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கும், பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளுக்கு எதிரான பரிந்துரைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும் நோக்கில் நியமிக்கப்பட்ட விசேட பாராளுமன்றக் குழு அண்மையில் முதல் தடவையாகக்கூடியது.

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தலைமையில் இந்தக் குழு கூடியது.

நாட்டிலுள்ள பெண்களை பெரிதும் பாதித்திருக்கும் நுண் கடன் நிதி நிறுவனங்களால் ஏற்படும் பிரச்னைகள் குறித்து இந்தக் குழு கவனம் செலுத்தியது. நுண்கடன் நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரசபையை விரைவில் அமைப்பது தொடர்பான யோசனை அமைச்சரவைக்கு விரைவில் சமர்ப்பிக்கப்பட விருப்பதாகவும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

இந்த விசேட குழுவின் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இதற்கமைய பணியிட வன்முறை உட்பட பாலின அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் பெண்களின் குறைகளை விசாரிப்பதே இந்தக் குழுவின் முதன்மையான பணியாகும்.

பாலின சமத்துவத்தை நோக்கமாக கொண்ட சட்டங்களை ஆராய்ந்து மதிப்பாய்வு செய்வது, பாலின சமத்துவத்தை ஸ்தாபிப்பதற்கான திட்டங்களை வகுத்தல் மற்றும் அவற்றுக்கான நிதி ஒத்துழைப்புக்களை வழங்குவது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் அதிகாரிகளையும் இந்தக் குழு ஊக்குவிக்கும்.

தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் முடிவு எடுக்கும் அமைப்புகளிலும், அரச, சிவில் சமூகம் மற்றும் தனியார் துறையிலும் அதிக பெண்கள் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிப்பதிலும் இந்தக் குழு பங்களிக்கவுள்ளது. (ஐ)

# சீருடை நிறம்கூடத் தெரியும் அதிகாரத்தை தமிழரிடம் விட்டுவைக்க அரசு தயாரில்லை!

## ஐங்கரநேசன் கண்டனம்!

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். விடுதலைப் புலிகளின் எண்ணங்களை முன்னெடுக்கவும் விடுதலைப் புலிகளை மீளுருவாக்கவும் முயன்றதாலேயே இவர் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

யாழ்.மாநகர சபையில் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த விடயங்களைக் கண்காணிப்பதற்கென உருவாக்கப்பட்ட பணிக்குழாமுக்கு வழங்கப்பட்ட நீலநிறச் சீருடைகள் விடுதலைப் புலிகளின் காவல்துறையின் சீருடைகளை ஒத்திருப்பதாகக் குற்றம் சாட்டியே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தென்னிலங்கை மாநகர சபைகள் சிலவற்றில் பணியாளர்கள் இதே நீலநிறச் சீருடைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். இந்நிலையில் மணிவண்ணனை கைது செய்ததன் மூலம் சீருடையின் நிறத்தைத் தெரிவு செய்யும் அற்ப அதிகாரத்தைக் கூட தமிழர்களிடம் விட்டு வைக்கத் தான் தயாராக இல்லை என்பதைப் பேரினவாத அரசாங்கம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

மணிவண்ணன் கைது தொடர்பாகத் தமிழ் தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று பொ. ஐங்கரநேசன் நிகழ்த்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார். (ஐ)



# விந்தன் பயணித்த வாகனத்தை மோதியது இராணுவ பிக்கப்!

மன்னார், ஏப். 10

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் பயணித்த வாகனத்தை பின்பக்கமாக இராணுவ வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று மதியம் மன்னார், வெள்ளாங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வெள்ளாங்குளம் ஊடாக துணுக்காய் சென்று கொண்டிருந்த விந்தன் கனகரட்ணத்தின் வாகனத்தையே இராணுவ வாகனம் பின்பக்கமாக மோதியது.

இந்த விபத்தால் வாகனத்திற்கு மட்டும் சிறிய சேதம் ஏற்பட்டதாகக் தெரியவருகின்றது. (ஐ)

# உள்ளூராட்சி அதிகாரத்தை அச்சுறுத்துகிறது அரசு!

## நிரோஷ் சாடல்

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ். மாநகர சபையின் அதிகாரம்சார் விடயத்தை நிர்வாக ரீதியாக அணுகுவதை விடுத்து பயங்கரவாதத் தடை சட்டத்தில் பொலிஸார் மூலம் அணுகுவது உள்ளூராட்சி மன்றங்களின் செயல்பாடுகளை அச்சுறுத்தி மட்டுப்படுத்தும் முயற்சி - என்று வலி. கிழக்கு பிர தேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

மேலும், யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணனின் கைது ஜனநாயக மறுப்பாகவும் அதே வேளை பகிரப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றங்கள் இயங்க முடியாது. வெறுமனே ஒரு திணைக்களம் போல் இயங்குக என மத்திய அரசால் விடுக்கப்படும் அச்சுறுத்தலாகவுமே பார்க்க முடிகிறது.

இந்தக் கைது உட்பட அண்மைக்காலமாக உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மீது முடுக்கி விடப்பட்டுள்ள பொலிஸ் விசாரணைகள் ஜனநாயக ரீதியில் மக்கள் ஆணை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட சபைகள் தமது கருமங்களை ஆற்ற முடியாது என அடக்குமுறைக்குள்ளாக்கும் முயற்சியாகும்.

அடிப்படையில் மத்திய அரசாங்கம் ஜனநாயகக் கட்டமைப்பில் குறைந்தது உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரப் பகிர்வைக்கூட ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்பதையே இந்த கைது காட்டுகிறது. - என்றார்.

# வீட்டில் தனியாக வசித்தவர் சடலமாக நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப். 10

தென்மராட்சி கொடிகாமம் பகுதியில் நபர் ஒருவர் தனியாக வசித்து வந்த நிலையில் நேற்று வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குடமியன், கொடிகாமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி இராமேஸ்வரன் (வயது-41) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவ இடத்தில் மரண விசாரணை அதிகாரி விசாரணையை மேற்கொண்டார். (அ)

# 5 லட்சத்து 68 ஆயிரம் தடுப்பூசிகள் தேவை

கொழும்பு,ஏப்.10

இலங்கையில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டத்தின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 06ஆம் திகதி வரை இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்போது, 9 இலட்சத்து 24 ஆயிரத்து 687 பேருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், 3 இலட்சத்து 56 ஆயிரத்து 730 தடுப்பூசிகள் மாத்திரமே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதிய வகை கொரோனா அடையாளம்

# “மூன்றாவது அலை ஏற்படாத வகையில் செயல்படுவது பொதுமக்கள் பொறுப்பு”

கொழும்பு,ஏப்.10

**பண்டிகை காலங்களில் தன்னிச்சையாக செயல்படுவதைத் தவிர்க்குமாறு இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தினர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

புதிய வகை கொரோனா வைரஸ் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, நாட்டின் மூன்றாவது அலை தாக்கம் தோற்றம் பெறாத வகையில் அவதானத்துடன் செயல்படுவது பொதுமக்களின் பொறுப்பாகும் என்று பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்துள்ளார்.

பண்டிகை காலங்களில் வணிக நடவடிக்கையில் ஈடுபடும்போது உடல்நலம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் மிகவும் அவசியம்.

நாடு இயல்பு நிலைக்குத் திரும்பும்போது, கொரோனா நிலைமை மோசமடைந்துவிட்டால் அது நாட்டை மேலும் தனிமைப்படுத்தி பொருளாதார ரீதியான பல்வேறு தாக்கங்க ளுக்கு உட்படுத்தும்.

இக்காலப் பகுதியில் குழந்தைகள், முதியவர்கள், தாய்மார்கள் மற்றும் அண்மையில் அறுவை சிகிச்சை செய்த நபர்களை நெரிசலான இடங்களுக்கு அழைத்து செல்வதைத் தவிர்க்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

(எ)

# திருமதி இலங்கை அழகி கிரீடத்தை பறித்த கரோலின் ஜூரிக்கு 10- 20 ஆண்டுகள் சிறை

### ஜனாதிபதி சட்டத்தரணி சில்வா எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.10

2021 ஆம் ஆண்டுக்கான திருமதி இலங்கை அழகி போட்டியின் வெற்றியாளரான புஷ்பிகா டி சில்வாவின் கிரீடத்தை, அவரது தலையிலிருந்து வலுக்கட்டாயமாக திருமதி உலக அழகி கரோலின் ஜூரி பறித்ததாக உறுதி செய்யப்பட்டால், அவருக்கு 10 - 20 ஆண்டுகள் சிறைத்தண்டனையை பெற்றுக்கொடுக்க முடியும் என ஜனாதிபதி சட்டத்தரணி யு.ஆர்.டி. சில்வா எச்சரித்துள்ளார்.

இந்த செயல்பாட்டுக்காக உலக அழகி கரோலின் ஜூரியிடம் இழப்பீடும் கோருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில்: சட்டத்தரணி யு.ஆர்.டி. சில்வா மேலும் தெரிவிக்கையில்: நடுவர் மன்றத்தை மீறி அவரது சக்தியை காட்டுவதற்கு கரோலின் ஜூரி முனைந்துள்ளமையையே அவரது செயல்பாடு காட்டுகின்றது.

அந்தவகையில் குற்றவாளியாக சந்தேகிக்கப்படும் கரோலின் ஜூரி மீது வற்புறுத்தல், மிரட்டிப் பணம் பறித்தல், திருட்டு மற்றும் காயத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்படலாம்.



இதேவேளை போட்டியின் ஏற்பாட்டுக் குழு, கரோலின் ஜூரிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கும் வாய்ப்புள்ளது.

மேலும், குறித்த நிகழ்ச்சியில் கரோலின் ஜூரியின் நடவடிக்கைகளை ஒருபோதும் மன்னிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற திருமதி இலங்கை அழகிப் போட்டியில் புஷ்பிகா டி சில்வா வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார்.

இவ்வாறு அறிவிக்கப்பட்டு சிறிது நேரத்தில் ஜூரி, அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதாவது, வெற்றியாளர் விவாகரத்து செய்யப்பட்டவர். அத்தகைய ஒருவர் இதில் போட்டியிட முடியாது. எனவே இரண்டாவது வெற்றியாளர், முதலாவது வெற்றியாளராக தெரிவுசெய்யப்படுகிறார் எனக் குறிப்பிட்டார்.

அதன்பின்னர் ஜூரி, மேடையில் வெற்றியாளராக அறிவிக்கப்பட்ட புஷ்பிகா டி சில்வாவின் தலையில் இருந்த கிரீடத்தை அகற்றி, இரண்டாவது வெற்றியாளருக்கு அணிவித்து அவரை நிகழ்வின் வெற்றியாளராக அறிவித்தார்.

இந்த சம்பவம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி இருந்ததுடன் பாதிக்கப்பட்ட புஷ்பிகா டி சில்வா, தான் விவாகரத்தானவர் இல்லை என அறிவித்ததுடன் பொலிஸிலும் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருந்தார்.

இதனையடுத்து ஜூரி, பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். இதுதொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (எ)

# போலி முகவரிக்கு வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகையான போதைப்பொருள்கள்

கொழும்பு,ஏப்.10

வெளிநாடுகளிலிருந்து போலி முகவரிகளுக்கு அனுப்பப்பட்ட ஐந்து பொதிகளிலிருந்து பெருந்தொகை போதைப்பொருள்கள் சுங்கப்பிரிவு அதிகாரிகளால் கொழும்பு மத்திய அஞ்சல் பரிவர்த்தனையிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதியானது 7 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பொதிகள் வெரஹேர, ஹோமாகம மற்றும் கண்டி பகுதிகளைச் சேர்ந்த முகவரிகளுக்கு இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளிலிருந்து அனுப்பப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஊடகங்கள் முன்னிலையில் குறித்த பொதிகளை சுங்கப்பிரிவு அதிகாரிகள் நேற்று முன்தினம் மாலை திறந்தனர்.

அவற்றிலிருந்து 4 மில்லியன் ரூபாய் பெறுமதியுடைய குஷ் எனப்படும் 278 கிராம் போதைப்பொருளையும், 3 மில்லியன் ரூபாய் பெறுமதியான எக்ஸ்டஸி என்று அழைக்கப்படும் 400 போதை மாத்திரைகளையும் பறிமுதல் செய்தனர்.



மேலதிக விசாரணைகளுக்காக இந்த போதைப் பொருள்கள் சுங்கப் பிரிவு அதிகாரிகளால் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப்பிரிவில் ஒப்படைக்கப்பட்டன.

(எ)





# வீட்டில் பதுங்கு குழியில் பதுங்கியிருந்த பாதாள உலகக்குழு உறுப்பினர் கைது!

கொழும்பு,ஏப்.10

முல்லேரியா பகுதியில் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினர் முன்னெடுத்த சோதனையின்போது பாதாள உலகக் குழு உறுப்பினரான ஜீடி எனப்படும் சரத்குமார கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜீடி அவரது வீட்டில் நிலத் தடியில் அமைக்கப்பட்ட ஒரு பதுங்கு குழியில் பதுங்கியிருந்த நிலையில் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் வெலிகம பகுதியில் 112 கிலோ கிராம் ஹெரோயின் மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஒன்பதாவது சந்தேக நபர் இவர் என பொலிஸார் அடையாளப்படுத்தியுள்ளனர்.

அங்கொட லொக்காவுடன் தொடர்பிலிருந்ததாகக் கூறப்படும் இவர், நாட்டின் பல்வேறு பகுதிகளில் மறைந்திருந்த சந்தர்ப்பத்தில் அவரைக் கைது செய்ய பொலிஸாரும், விஷேட அதிரடிப் படையினரும் தொடர்ந்தும் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில், அவர் வீடு திரும்பியுள்ளதாக கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைவாக பொலிஸ் விஷேட அதிரடிப் படையினர் முன்னெடுத்த சோதனையின்போதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

(எ)

# சட்டத்தை மீறுவோருக்கு எதிராக தராதரம் பார்க்காமல் நடவடிக்கை

### அமைச்சர் நாமல் தெரிவிப்பு



பொலநறுவை,ஏப்.10

சட்டத்தை மீறுவோருக்கு எதிராக தராதரம் பார்க்காமல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

அத்துடன், நாட்டு மக்கள் அனைவருக்கும் நியாயமான விலையில் பொருள்களை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் அவர் குறிப் பிட்டார்.

(எ)


# கடந்த 24 மணிநேரத்தில் 1187 பேர் இலங்கை வர 1101 பேர் வெளியேறினர்

கொழும்பு,ஏப்.10

நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேர காலப்பகுதியில் வெளிநாடுகளிலிருந்து 1,187 இலங்கையர்கள் கட்டுநாயக்கா சர்வ தேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இதில் டோஹாவைச் சேர்ந்த 189 பேரும், ஐக்கிய அரபு எமி ரேட்ஸின் டுபாயைச் சேர்ந்த 134 பேரும் உள்ளடங்குகின்ற னர்.

இவ்வாறு வருகை தந்த அனைவரும், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக சுற்றுலா ஹோட்டல்களுக்கு இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.



இதேவேளை, கடந்த 24 மணிநேரத்தில், 21 விமானங்களில் 1,101 பயணிகள் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து வெளிநாடுகளுக்குப் புறப்பட்டுள்ளனர்

இதில் சவுதி அரேபியா- ரியாத்துக்கு செல்லும் 255 பேரும் இந்தியா - சென்னைக்கு செல்லும் 170 பேரும் உள்ளடங்குகின்றனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu



## தேசிய தடகள விளையாட்டு: டில்ஷி குமாரசிங்க சாதனை

கொழும்பு, ஏப். 10

தேசிய தடகள விளையாட்டு போட்டியில் டில்ஷி குமாரசிங்க புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

டில்ஷி குமாரசிங்க பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் 2:02:52 நிமிடங்களில் எல்லையை கடந்து குறித்த சாதனையை புரிந்துள்ளார்.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இடம்பெற்று வரும் தேசிய தடகள விளையாட்டுப் போட்டியிலேயே டில்ஷி குமாரசிங்க இந்த சாதனையை படைத்துள்ளார். (ஐ)

## படிக்கல்லின் வருகையால் ஐ.பி.எல். அணிகள் அதிருப்தி!



சென்னை, ஏப். 10

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரரான தேவ்தத் படிக்கல் காப்பு குமிழியில் கடந்த வெள்ளிக்கிழமை நுழைந்தார். இது ஐ.பி.எல். அணி உரிமையாளர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஹோட்டலில் கட்டாயமாக ஒரு வாரம் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்படாமல் அவர் நேரடியாக அணிக்குள் நுழைந்திருப்பதை மற்றைய அணிகள் விரும்பவில்லை. இது தொடர்பில் அவர்கள் தமது எதிர்ப்பையும் பதிவு செய்துள்ளனர்.

கடந்த, மார்ச் 22 ஆம் திகதி படிக்கல்லுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து தனிமைப்படுத்தலில் இருந்த அவர் கடந்த 7ஆம் திகதி பெங்களூரிலிருந்து போட்டி நடக்கும் சென்னைக்கு தனியாக வாகனத்தில் வந்தார். இதைத் தொடர்ந்து வீரர்களுக்கான காப்பு குமிழியில் அவர் இணைந்தார்.

இதையடுத்தே ஐ.பி.எல். அணிகள் படிக்கல்லுக்கு எதிர்ப்பை வெளியிட்டன. எனினும், இது தொடர்பில் ஐ.பி.எல். நிர்வாகம் கருத்துத் தெரிவிக்கையில்,

“தேவ்தத் படிக்கல் விதிமுறைகளை அனுசரித்து கொவிட் 19 தொற்றுக்கு எதிர்மறையான அறிக்கைகளுடனேயே அணியில் இணைந்தார். அவரது பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய வாழ்வை பெங்களூர் அணியின் மருத்துவர் உறுதிப்படுத்துவார். அவருடன் படிக்கல் தொடர்ந்தும் தொடர்பில் இருப்பார்.” என்றது.

எனினும், நேற்றைய முதல் போட்டியில் தேவ்தத் படிக்கல் களமிறங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

### ஐ.பி.எல். இருபது - 20 போட்டி:

# இறுதி பந்து வரை பரபரப்பு பெங்களூருக்கு முதல் வெற்றி!

சென்னை, ஏப். 10

இறுதிப் பந்துவரை பரபரப்பாக நீடித்த முதல் போட்டி யில் நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணியை 2 விக்கெட்களால் வெற்றி கொண்டது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்.

ஐ.பி.எல். என்று அழைக்கப்படும் இந்தியன் பிறிமியர் லீக் இருபது - 20 போட்டிகள் நேற்று ஆரம்பமானது. சென்னையில் நடந்த முதல் போட்டியில் நடப்பு சம்பயின் மும்பை இந்தியன்ஸ் அணியும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதின.

இதில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணியின் தலைவர் விராட் கோலி முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தார்.

இதனால், மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப் பெடுத்தாடியது. அணித் தலைவர் ரோஹித் சர்மாவும், கிறிஸ் லின்னும் தொடக்க வீரர்களாகக் களம் புகுந்தனர்.

ஆட்டத்தை ஆரம்பித்த இருவரும் பந்துகளை மெதுவாகவே ஓட்டங்களை சேர்த்தனர். நான்காவது ஓவரை வீசினார் சாகல். அந்த ஓவரின் கடைசி பந்தை எதிர் கொண்டார் லின். கூக்லியாக வீசப்பட்ட அந்தப் பந்தை மெதுவாக தட்டினார் லின். இதன்போது ரோஹித் ஓட்டம் எடுக்க விரும்பி ஓடினார். ஆனால், லின் ஓட்டம் எடுக்க விரும்பாமல் நிற்கவே, ரோஹித் திரும்பச் செல்ல முயன்றார். ஆனால், பந்தை எடுத்த கோலி சாகலிடம் அதை எறியவே அவர் ஸ்ரொம்ப் செய்யவே ரோஹித் சர்மா ஆட்டமிழந்து சென்றார். அப்போது அவர் ஒரு பௌண்ட்ரி, ஒரு சிக்ஸர் அடங்கலாக 19 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அடுத்து வந்தார் சூரியகுமார் யாதவ். மும்பையின் அதிரடி ஆட்டக்காரராக கடந்த போட்டியில் ஜொலித்த அவர், இம்முறை சறுக்கினார். 23 பந்துகளை சந்தித்த அவர் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 31 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் 4 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்கள் என விளாசிய லின் 35 பந்துகளில் 49 ஓட்டங்களை எடுத்த நிலையில் - ஓர் ஓட்டத்தால் அரைச்சதத்தை தவற விட்டு வாஷிங்டன் சுந்தரின் பந்தில் அவரிடமே பிடி கொடுத்து வெளியேறினார்.

பின்னர் வந்த இஷான் கிஷன் 2 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 28 ஓட்டங்களை எடுத்து எல். பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த வீரர்கள் எவரும் ஜொலிக்கவில்லை. ஹார்திக் பாண்ட்யா 13, கிரன் பொலார்ட் 7, குர்ணல் பாண்ட்யா 7, மக்ரோ ஜன்ஸன் 0, ராகுல் சாகர் 0 என்று ஆட்டமிழக்கவே 20 ஓவர்கள் 9 விக்கெட்கள் இழப்புக்கு 159 ஓட்டங்களை எடுத்தது.

பெங்களூரின் பந்துவீச்சில் ஹர்ஷல் பட்டேல் 5 விக்கெட்களை கைப்பற்றினார். இறுதி ஓவரில் மட்டும் அவர் குர்ணல் பாண்ட்யா, மக்ரோ ஜன்சன், ராகுல் சாகர் என மூவரை ஆட்டமிழக்கச் செய்தார். ஜெமைசன், வாஷிங்டன் சுந்தர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 160 ஓட்டங்கள் என்ற இலகு இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடியது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி.

இங்கிலாந்து - இந்தியா போட்டியில் பரீட்சார்த்தமாக தொடக்க வீரராக களமிறங்கி அணியை வெற்றி நோக்கி கொண்டு சென்றிருந்தார் கோலி. இதேபாணியை பின்பற்றி பெங்களூர் அணிக்கும் தொடக்கம் கொடுத்தார் விராட் கோலி. அவருடன், வாஷிங்டன் சுந்தரும் தொடக்க வீரராகக் களமிறங்கினார்.



தான் எதிர்கொண்ட முதல் பந்தில் பௌண்ட்ரி அடித்து அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்தார் கோலி. வாஷிங்டன் சுந்தர் நிதானமாக ஆட, கோலி அதிரடியாக ஆடினார். 16 பந்துகளில் 10 ஓட்டங்களை எடுத்த வாஷிங்டன் சுந்தர் ஆட்டமிழக்க, அடுத்து வந்தார் ராஜத் படிதார். அவராலும் நிலைக்க முடியவில்லை, 8 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார்.

அடுத்து வந்த அதிரடி வீரர் கிளென் மக்ஸ்வெல் வழக்கமான தனது பாணியில் ஆடினார். இந்நிலையில், விராட் கோலி 4 பௌண்ட்ரிகளுடன் 33 ஓட்டங்களை எடுத்து பும்ராவின் பந்தில் எல். பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார். மக்ஸ்வெல்லுடன் இணைந்த ஏபி டி வில்லியர்ஸ் அதிரடியில் மிரட்டினார்.

இந்நிலையில், 3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களை விளாசிய மக்ஸ்வெல் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பியபோதும், ஏபி டி வில்லியர்ஸ் அதிரடி காட்டினார். இறுதி ஓவரில் நான்காவது பந்தில், அதுவரை அதிரடி காட்டிய வில்லியர்ஸ் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களை விளாசிய அவர் 27 பந்துகளில் 48 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார்.

இறுதி இரு பந்துகளில் இரு ஓட்டங்களை வெற்றிக்காக பெற வேண்டிய நிலையில் 9ஆவது வீரராக இறங்கிய ஹர்ஷல் பட்டேல் அந்த ஓட்டங்களைப் பெற்றார். இதனால் இறுதிப் பந்தில் பெங்களூர் அணி 160 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இறுதியில் பட்டேல் 4, சிராஜ் 0 என்ற ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் சார்பில் பந்துவீசிய பும்ரா, ஜன்சென் தலா இரு விக்கெட்களை கைப்பற்றினர். (ஐ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : வழங்குபவர் திருமதி .கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : மைதானம்-வாராந்த விளையாட்டு நிகழ்வுகளின் தொகுப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை-மாகாண பாடசாலைகள் தேசிய பாடசாலையாக மாற்றம் பெறுவதில்



**இரவு**
7.00 மணி : சுப்பர் குறுாப்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்-
மீண்டும் கொரோனா மீள்வது எப்படி



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஐ டிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் உசன் கஜகேணி விநாயகர் கோவில் தேர்த்திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் உசன் கஜகேணி விநாயகர் கோவில் தேர்த்திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org